விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 340 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 08 வியாழக்கிழமை (24.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

### ரணிலின் தீர்மானம் தொடர்பில்
# தமிழ்த் தலைவர்கள் கொழும்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

தமிழ் தலைவர்களின் பங்கு பற்றுதலுடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நேற்று மாலை முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

16

### ஆட்சி மாற்றம் கோரினால்
# படையினர் மூலம் அடக்குவோம்
### சபையில் ஜனாதிபதி ரணில்

- போராட்டம் மூலம் ஆட்சி மாற்றத்துக்கு இடமளிக்க முடியாது
- பொருளாதாரத்தை கட்டியெழுப்பும்வரை பாராளுமன்றத்தைக் கலைக்கப்போவதில்லை
- பொருளாதாரத்தை சீராக்கிய பின்னரே தேர்தல் நடைபெறும்

3 11

### சீனி, மா உட்பட
# 4 உணவுப் பொருட்கள் சதொசவில் குறைப்பு

(கொழும்பு)

சீனி, மா உட்பட சதொச நிறுவனத்தினால் உணவு பொருட்கள் சிலவற்றின் விலைகள் நேற்று முதல் அமுலாகும் வகையில் குறைக்

15

### இனப்பிரச்சினைக்கு தீர்வாக
# அதிகாரப் பகிர்வு வழங்க சம்மதமா?



### பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில் பகிரங்க கேள்வி

- அதிகார பரவலாக்கம் குறித்து டிசம்பர் 11 இன் பின்னர் சர்வகட்சி கலந்துரையாடல்
- 75 ஆவது சுதந்திரதின வருடத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்.
- வடக்கு காணி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப் படும்.
- சிங்களவர்களின் அச்சத்தை போக்கி தமிழர்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# மண்ணெண்ணெய் விநியோகத்தில்
### நிலவுகின்ற தாமதத்தை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

மண்ணெண்ணெய் விநியோகத்தில் நிலவுகின்ற தாமதத்தை எதிர்வரும் இரண்டு நாட்களின் முழுமையாக நீக்க அரசாங்கம் நடவடிக்கை

02

### போதை மாத்திரைகளுடன்
# யாழில் பெண் உட்பட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பொலிஸாரினால் பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்

15

# அதிகார பரவலாக்கம் குறித்து சஜித்துடன் கலந்துரையாடி முடிவு
### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அதிகார பரவலாக்கல் முறைமையை அமுல்படுத்துவதற்கு ஆதரவா? இல்லையா? என்பது குறித்து சஜித் பிரேமதாசவுடன் கலந்துரையாடி முடிவை அறிவிப்போம் என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே எதிர்க்கட்

15

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஜெனீவாவை ஏமாற்றவே
### ஜனாதிபதி ரணில் தொடர்பில் ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனீவாவை ஏமாற்றுவதற்கே அன்றி, இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான தேவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இருக்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

16

### அராலி மேற்கில்
# குடும்ப பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

அராலி மேற்கில் குடும்பப் பெண் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த கினுசன் அஜந்தினி(வயது23)

02

# யாழில் மோ. சை விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கபிரியல் செரிஸ்டன் (வயது- 49) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கந்தர் மடம் அம்மன் வீதி

15

### வல்லைப் பாலத்தடியில்
# தவறி விழுந்த இளைஞன் நேற்று சடலமாக மீட்பு

(கரணவாய்)



வல்லைப் பாலத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இளைஞரொருவர் நீரேரியில் தவறி விழுந்து காணாமல் போயுள்ள நிலையில், நேற்று புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மண்ணெண்..

எடுத்துள்ளது.

மீனவர்களுக்கான எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 74 மண்ணெண்ணெய் பவுசர்கள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் (சமூக விவகாரப் பிரிவு) கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

இதற்கமைய, 49 தனியார் துறை எரிபொருள் நிரப்பு நிலையங்கள், 18 கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் ஏனைய 07 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் தொடர்ந்து விநியோகிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அனுமதி வழங்கப்பட்டிருந்தும் பணம் செலுத்தாத காரணத்தால் நேற்று முன்தினம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாத அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் நேற்று மண்ணெண்ணெய் விநியோகிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கீர்த்தி தென்னகோன் மேலும் தெரிவித்தார்.

மேலும், இதுவரை மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாத 18 கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாகாண கூட்டுறவு ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களின் பரிந்துரையின் பேரில் இதற்கு தேவையான நிதி வசதிகள் கூட்டுறவு கிராமிய வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## குடும்பப் பெண்..

என்ற ஒரு பிள்ளையின் தாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பிலான மரண விசாரணையை மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## கண்ணீர் அஞ்சலி



யா/நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் செயலாளரும் ஆலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவரும் எமது அன்புக்கும் மதிப்புக்குரியவருமான

**அமரர் கந்தையா சிவராசா**

(வாத்தியார்)

ஓய்வுபெற்ற உப அதிபர்

(யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்:- 02.12.1935

மறைவு:- 21.11.2022


(C-5320)

சிவஸ்ரீ சதா.மகேஸ்வரக்குருக்கள் (கண்ணன் ஐயா) குடும்பம்

சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக்குருக்கள் (சிவம் ஐயா) குடும்பம்

## பாராட்டி

### வாழ்த்துகின்றோம்



**சதீஷ்குமார் சர்மிளன்**

21.11.2022 திங்கட்கிழமை அன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் (Graduation of the Higher Diploma in cardiography (School of Cardiography NHSL) எனும் பட்டத்தைப் பெற்ற **சதீஸ்குமார் சர்மிளன்** அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-5319)

வாழ்த்துவோர்

வடமராட்சி ஊடகத்துறையினர்

## மரண அறிவித்தல்

மலர்வு 08 . 04 . 1944



உதிர்வு 23 . 11 . 2022

### திருமதி கதிரேசு திலகவதி

இல.180, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்ட திருமதி கதிரேசு திலகவதி அவர்கள் நேற்று (23.11.2022) புதன்கிழமை காலமானார்.


அன்னார் சொக்கலிங்கம் கதிரேசு அவர்களின் அன்பு மனைவியும் முருகானந்தன், கிருபானந்தன், சிறிமயூரன், மஞ்சுளா, வாணிசிறி, காலஞ்சென்ற பவானந்தன், சதானந்தன், ஆரூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவமங்களம், ஜமுனா, இராஜேஸ்வரி, சிறிதரநாதன், நாகேந்திரன், சசிகலா, வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும் துசாந்தன், பவானிஜா, இதயரூபன், இதயரூபினி, மயூரி, மனோரஞ்சிதன், ஸ்ரீவானி, சிவரஞ்சன், கலைவாணி, கிருத்திகா, கிருசாந், ரவிறிஸ்னா, நிசாந், கிசோமியா, நவில்சன், ஹரிசாந் ஆகியோரின் பேர்த்தியும் அரிஸ், வைஸ்னவி, தியாஸ்னவி, கௌமிகா, கனிகா, பிரவீன், ஆதிரா, கவின் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 2 மணியளவில் இரணைமடுச்சந்தி பாரதிபுரம் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5321) தகவல்: குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எம்முடன் பயணிக்கும் லண்டன் வாழ்சமூகப் பற்றாளர் **திரு.சி.சிவகுமார்** அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் கந்தையா சிவராசா**

(ஓய்வுபெற்ற உப அதிபர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி!

(C-5317) யாழ்.எய்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றம் கோரி போராடினால்

# முப்படையினரைக் கொண்டு அடக்குவோம்!

## ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை



**(கொழும்பு) —**

**இலங்கையில் போராட்டத்தின் ஊடாக மற்றுமொரு ஆட்சி மாற்றத்துக்கு இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "இனியும் ஆட்சி மாற்றம் செய்வதற்காகப் போராட்டத்தில் யாரும் ஈடுபடுவார்களாயின், முப்படையினரைப் பயன்படுத்தி அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது. இது வன்முறைச் செயலாகும். அவ்வாறு தீ வைப்பதற்கு யார் அவர்களுக்கு அதிகாரம் வழங்கினார்கள்?

தீ வைத்தவர்களின் பின்னால் யார் செயற்பட்டார்கள்? என்பதைக் கண்டறிய விசேட செயலணி ஒன்றை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளோம்.

தேர்தல் முறைமையிலும் மாற்றம் ஏற்படுவது அவசியம். விருப்பு வாக்களிப்பு முறை இருக்கும் வரையில் ஊழல் இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்" எனத் தெரிவித்தார். (நி)

## காணிகளை மீட்க

# மனித உரிமைகள் ஆணையாளரை நாடியது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

(லண்டன்)

இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை மீட்பதற்கு உதவுமாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் யுத்தத்தின் போது இலங்கை இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டதாகவும் யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இதுவரை காணிகள் கையளிக்கப்படவில்லை என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கோவில்கள், பாடசாலைகளை இடித்து ஹோட்டல்கள், பங்களாக்கள், வீடுகள், விகாரைகளை கட்டுவதன் மூலம் இந்தக் காணிகளை பாதுகாப்பு தரப்பினர் கையகப்படுத்தி உள்ளனர் என்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் 95 வீதமான காணிகள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய 5 வீதமான காணிகள் விரைவில் கையளிக்கப்படும் எனவும் நீதிய மைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# மரண அறிவித்தல்



தகவல்-குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:- 077 0354 488

076 6992 591

ஜனனம் -26.01.1958 மோட்சம் -21.11.2022

## திருமதி. தவபாய்க்கியம் அமிர்தலிங்கம்


இளம் சைவப்புலவர் " திருமுறை நெறிச் செல்வர்"
"சித்தாந்த ரத்தினம்" உப தலைவர் ஈழத்து
காசிசேஸ்திரம் முரசுமோட்டை

தர்மக்கேணி பளையை பிறப்பிடமாகவும் இல.234/3, 3ம் யூனிற் முரசுமோட்டையை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் சுப்பையா கார்த்திகேசு பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிற்றம்பலம் சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் சிற்றம்பலம் அமிர்தலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் குமணன் (லண்டன்), செந்தீபன் (லண்டன்), அபிராமி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயராணி (லண்டன்), உஷேந்தினி (லண்டன்),சிவானந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிரதீஸ், அபிலாஸ், லட்சுமி,விஷ்வா, விஷ்ணு, ஆதிரா, அரண் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அமரர் சடாச்சரலட்சுமி, அமரர் நடராஜா, தனலட்சுமி,கணேஷமூர்த்தி (லண்டன்), யோகலட்சுமி(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சண்முகநாதன் (பிரான்ஸ்) , அமரர் நல்லையா, அமரர் குருநாதன், அமரர் மனோன்மணி, குலசிங்கம் (திருவையாறு), தனபாலசிங்கம் (லண்டன்), அன்னம்மா (முரசுமோட்டை), செல்வராணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் அகிலன் (பிரான்ஸ்), நகுலன் (பிரான்ஸ்), விபுலன் (லண்டன்), விஜிதா (முரசுமோட்டை), துஷாந்தி (லண்டன்), சந்திரன் (ஜேர்மனி), ரவி (கனடா), நந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிருபாகரன் (லண்டன்), செஜகுகன் (லண்டன்), கவிதா (முரசுமோட்டை), சுமிதா (இத்தாலி), கஜேந்திரன் (அமெரிக்கா), சுயோத் (லண்டன்), அஜந்தன் (கனடா), பிருந்தா (கனடா), ரஞ்சினி (லண்டன்), சந்திரமோகன் (லண்டன்), பிரதீபன் (கனடா), யசோதினி (கனடா), தயாளினி (கனடா), ஜெகன் (லண்டன்), சுதன் (பிரான்ஸ்), சுமதி (பிரான்ஸ்), ரவி (ஜேர்மனி), ரஞ்சினி (லண்டன்), பிரதீபன் (கனடா), ராசநிதி (கனடா), குவேந்தினி (கனடா), ரேவதி (முரசுமோட்டை), குலமகள் (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தாயுமான தவபாய்க்கியம் (தவம்) அவர்கள் கடந்த 21.11.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.11.2022 வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் .நடைபெற்று அன்னாரின் பூதவுடல் ஐயன் கோவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

(13556)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மென்செஸ்டர் யுனைடெட்டிலிருந்து ரொனால்டோ வெளியேறினார்



போர்த்துக்கல் கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, இங்கிலாந்தின் மென்செஸ்டர் யுனைடெட் கழகத்திலிருந்து வெளியேறியுள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கிறிஸ்டியானோ ரொனால்டோ வெளியேறுகிறார் என மென்செஸ்டர் யுனைடெட் கழகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது. பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் அவர் வெளியேறுகிறார் எனவும் அக்கழகம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மென்செஸ்டர் யுனைடெட் கழகத்துக்காக இரு ஒப்பந்த காலங்களில் விளையாடி, 346 போட்டிகளில் 145 கோல்களை அடித்த ரொனால்டோவுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவரினதும் அவரின் குடும் பத்தினரதும் எதிர்காலத்துக்காக வாழ்த்துத் தெரிவிப்பதாகவும் அக்கழகம் தெரிவித்துள்ளது. (4)

# சவுதி அரேபிய அணியிடம் ஆர்ஜென்டீனா அதிர்ச்சித் தோல்வி



கட்டார் ஃபிஃபா கால்பந்து உலகக்கிண்ணத் தொடரின், குழுநிலைப் போட்டியில் சம்பியன் அணியான ஆர்ஜென்டீனா அணி, சவுதி அரேபியாவிடம் அதிர்ச்சி தோல்வியடைந்துள்ளது.

லுசைல் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இப் போட்டியில், ஆர்ஜென்டீனா அணியும் சவுதி அரேபியா அணியும் மோதின.



இப்போட்டியில், சவுதி அரேபிய அணி 2-1 என்ற கோல்கள் கணக்கில் சிறப்பான வெற்றியை பதிவு செய் தது.

இதில் சவுதி அரேபியா அணி சார்பில், சலே அல் ஷெஹ்ரி 48 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், சலீம் அல்டவ்சாரி போட்டியின் 53 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

ஆர்ஜென்டீனா அணி சார்பில், அணியின் நட்சத்திர வீரரான லியோனல் மெஸ்ஸி, தனக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன் படுத்தி போட்டியின் 10 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

இந்த வெற்றியின் மூலம் குழு சி பிரிவில் 3 புள்ளிகளுடன் சவுதி அரேபியா முதலிடத்தை பெற்றுள்ளது. (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2736

**சாக்சவி**

என்னதான் நாய் நன்றி உள்ளதாக இருந்தாலும்



அதால தாங்க்யூ சொல்ல முடியாது

**காந்தன்**

இந்த உலகத்தில 2 பேரை
ரொம்ப நேரம் முறைச்சுப் பார்க்க முடியாது



முதலாவது சூரியன்... இரண்டாவது மனைவி...

**பிரணவி**

ஏன்டா பூனைக்கு காது வழியா
பால் குடுத்த...?



ஏன்னா அது வாயில்லா ஜீவனாச்சே

**தனுஜன்**


நான் Monday பிறந்தேன் நீ..?
நான் Sunday பிறந்தேன் டி...



புளுவாத Sunday லீவுதானே...

**ரக்சிதா**

வாழை இலையில ஊத்தின
ரசம் மாதிரியே இருக்கு வாழ்க்கை!



எந்தப் பக்கம் போகுதுன்னே தெரியல...

**மிதுனன்**

ரியூசனில கரன்ட் கட்டாயிடுச்சுன்னு
வீட்டுக்குப் போகச் சொன்ன பிறகு



வேகமாக ஓடுங்கடா
திரும்ப வந்து உட்கார வைச்சிடப் போறாங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
நிதி அமைச்சு

# அபிவிருத்தி லொத்தர் மூலம் 06 நாட்களில்...

# ரூ. 13 கோடிகள்...

## 04 சுப்பர் வெற்றிகள்

ஷனிடு
**ரூ.8.37 கோடி சுப்பர் பரிசுப்பொதி**
**களுத்துறைக்கு...** 2022.11.14 ஆம் திகதி வெற்றி வாரம் - 4075

ஷனிடு
**ரூ.03 கோடி சுப்பர் பரிசுப்பொதி**
**பொலநறுவைக்கு...** 2022.11.17 ஆம் திகதி வெற்றி வாரம் - 4078

**ஒரு கோடி சுப்பர் பரிசுப்பொதி**
**கல்பிட்டியவிற்கு...** 2022.11.12 ஆம் திகதி வெற்றி வாரம் - 1088

வாசனாவ ராசி
**ரூ.50 இலட்சம் - சுப்பர் பரிசுப்பொதி**
**கடவத்தைக்கு...** 2022.11.15 ஆம் திகதி வெற்றி வாரம் - 3627

அபிவிருத்தி லொத்தர் சபை
இல.356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளி கலைவிழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் உ.ராகுலன் கலந்து கொண்டார்.

# யாழ்.செங்குந்தாவில் பட்டப்பகலில் திருட்டு

## பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடொன்றை உடைத்து உட்புகுந்த திருடர்கள் ஒரு பவுண் தங்க தோடுகள் இரண்டு, 30 அங்கர் பால்மா பெட்டிகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் வசிப்போர் வேலை நிமித்தம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியே சென்ற சமயம் வீட்டின் வளவினுள் அத்துமீறி நுழைந்த திருடர்கள், வீட்டின் கதவை உடைத்து வீட்டினுள் புகுந்து திருட்டில் ஈடுபட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-33-104)

# சைக்கிள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை திருடப்பட்டுள்ளது.

சந்தையில் வியாபாரத் தில் ஈடுபடும் தந்தைக்கு உணவு வழங்க வந்த சிறுவன் ஒருவருடைய துவிச்சக்கரவண்டியே இவ்வாறு திருட்டுப் போயிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி சந்தை வளாகம் மற்றும் நகர் பகுதிகளில் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக துவிச்சரவண்டி திருட்டு இடம்பெறுகின்ற போதிலும் இதுவரை எந்தத் தரப்பும் திருட்டை தடுக்க முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4-6-30)

# பாகிஸ்தான் தூதுவர் யாழ்.நூலகத்திற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி நேற்று புதன்கிழமை யாழ்ப்பாண பொது நூலகத்தினை பார்வையிட்டார்.

அதன்போது, யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் உயர்ஸ்தானிகரை வரவேற்றதோடு யாழ்ப்பாண பொது நூலகத்தின் சிறப்புகள் மற்றும் வரலாற்று ஆவணங்களை காண்பித்தார். (4-6-33)

# பட்ஜெட் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று புதன்கிழமை காலை சபைக் கூட்ட மண்டபத்தில் தவிசாளர் க.தர்ஷன் தலைமையில் நடைபெற் றது.

30 உறுப்பினர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட மேற்படி சபையில் 28 உறுப்பி னர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு 26 உறுப்பினர்கள் ஆதரவாகவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள் நடுநிலைமையாகவும் செயற்பட்டு வரவு-செல வுத் திட்டத்தினை அங்கீகரித்தனர். (4-6)





தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று வடமாகாணத்திலுள்ள 14 பாடசாலைகளுள் முல்லைத்தீவிலுள்ள 5 பாடசாலைகளிலும் வவுனியாவிலுள்ள 7 பாடசாலைகளிலும் கிளிநொச்சியிலுள்ள 2 பாடசாலைகளிலும் கல்வி பயிலுகின்ற மாணவர்களுள் மொத்தமாக 965 பாடசாலை மாணவர்களிற்கும் 35 இலட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள், சீருடைகள், காலணிகள் மற்றும் புத்தகப்பைகள் என்பன யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைவேந்தன் மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

# பாண் விற்பனையாளர் மீது தாக்குதல்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - காட்டுப்புலத்தில் பாண் விற்பனை செய்யும் வாகனம் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மாதகல் பகுதியில் உள்ள வெதுப்பக உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்திகள் சுழிபுரம் பகுதிக்கு வாகனம் மூலம் எடுத்துச் சென்று விற்பனை செய்து வருவது வழமை. இந்நிலையில் வழமை போல பாண் விற்பனைக்கு வந்த வாகனம் மீதும் வாகன சாரதியும் விற்பனையாளரு மான இளைஞன் மீதும் முகத்திற்கு கறுப்புத் துணி கட்டி வந்த மர்மநபர்கள் மூவர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இச் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. வட்டுக் கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

# இராசிபலன்

24.11.2022
கார்த்திகை 08, வியாழக்கிழமை
பிரதமை பின்னிரவு 3.21 மணிவரை

அனுசம் முன்னிரவு 9.25 மணிவரை
சுபநேரம் -7.41-9.11 மணிவரை
இராகுகாலம்- 1.41-3.11 மணிவரை

சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை

வளவன்



**மேஷம்**

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும்' சூழ்நிலை உருவாகும், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




**கடகம்**

சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, அடிப்படை வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




**துலாம்**

நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.




**மகரம்**

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.




**ரிஷபம்**

ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.




**சிம்மம்**

தொலைபேசித் தகவல்கள் நெஞ்சம் மகிழ வைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அடிப்படை வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.




**விருச்சிகம்**

குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




**கும்பம்**

எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் எளிதில் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




**மிதுனம்**

வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.



**கன்னி**

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.



**தனுசு**

பயணத்தால் பலன் கிடைக்கும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழிலில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம்.



**மீனம்**

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் கைகூடும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

விருப்பமில்லா திணிக்கப்படும் கல்வி வேண்டாத உணவு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகள் மட்டும் வழங்கப்பட்டதே தவிர இதுவரை தீர்வு எதுவும் முன்வைக்கப்படவில்லை

## சுமந்திரன் சாடல்

(கொழும்பு)

கடந்த காலங்களில் வாக்குறுதிகள் மட்டும் வழங்கப்பட்டதே தவிர இதுவரை தீர்வு எதுவும் முன்வைக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், கையகப்படுத்தப்பட்ட காணிகள் விடுவிப்பது மற்றும் தமிழர் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி முன்னிலையில் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் நல்லிணக்கம், மீள்குடியேற்றம் தொடர்பாக ஒருபுறம் பேசிக்கொண்டிருந்தாலும் அது நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என குற்றம் சாட்டிய அவர், இந்த விடயம் குறித்து விசாரணை



செய்வதாக ஜனாதிபதியின் அறிவிப்பை வரவேற்பதாக தெரிவித்தார்.

தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பன தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை கொண்டு மக்களின் காணிகளை கைப்பற்றும் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாகவும் நாட்டில் உள்ள அனைத்து மக்களும் திருப்தியடையக்கூடிய வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# போதைப்பொருள் ஒழிப்பிற்கு தீவிரமாக போராட வேண்டியுள்ளது

## நீதி அமைச்சர்

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனை தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முழுமையற்ற அறிக்கைக்கு அமைய சுமார் 4 - 5 இலட்சம் இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். யுத்தத்தை விட, போதைப்பொருள் ஒழிப்பிற்காக தீவிரமாக போராட வேண்டியுள்ளது.

பொலிஸ் அல்லது போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள் வழக்கு சான்றுப் பொருட்களாக வைக்கப்பட்டிருக்கும்.

சிறிது காலத்தின் பின்னர் இவையும் காணாமல் போகின்றன. கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள் மீண்டும் மீண்டும் சமூகத்திற்குள் செல்கின்றன. இதற்கு பல அதிகாரிகளும் உடந்தையாகவுள்ளனர் என அவர் தெரிவித்தார். (நி)


## அங்கத்தவர் இணைப்பு

இளங்கலைஞர் மன்றத்துடன் இணைந்து கலைப்பணி செய்வதில் ஆர்வமுள்ள கலைஞர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

விண்ணப்பப்படிவத்தை மன்றத்தில் பெற்று பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பங்கள் 31.12.2022 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**தலைவர்/செயலாளர்**
**இளங்கலைஞர் மன்றம்,**
**சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

(C-5315)




பருத்தித்துறை தம்பசிட்டி பூவற்கரையில் ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ரவிரட்ணசிங்கம் ஒருங்கிணைப்பில் சீலா இமானுவேல் நிதி அனுசரணையில் 551 ஆவது காலாட் படைப்பிரிவின் ஆளணியின் கட்டுமான பணியில் அமைக்கப்பட்ட வீடு நேற்று புதன்கிழமை இராணுவத்தால் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

(படம்:-மகாலிங்கம்)


## வரவு செலவுத்திட்டம்-2023
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168ம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2022.11.24 திகதி தொடக்கம் 2022.11.30ம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், சுன்னாகம், உடுவில், ஏழாலை உபஅலுவலகங்களிலும் சுன்னாகம், உடுவில், ஏழாலை பொதுநூலகங்களிலும் பார்வையிடலாம் என்பதனை அறியத் தருகிறேன்.

**க.தர்ஷன், தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(C-5316)


# கார்த்திகை மாத இராசி பலன்கள் 17.11.2022-15.12.2022

## கும்பம்

**தடைகளைக் கண்டு தளராத உள்ளம் படைத்த கும்ப இராசிவாசகர்களே!**

சனி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். விரயங்கள் கூடுதலாக இருந்தாலும் அதற்கேற்ப வருமானமும் வந்து கொண்டேயிருக்கும். எனவே எடுத்த காரியங்கள் எளிதில் முடியும். இடமாற்றம், வீடு மாற்றங்களில் ஆர்வத்தை காட்டுவீர்கள்.

**சனி மற்றும் குருவின் சஞ்சாரம்**

விரயங்கள் கூடுதலாகத் தான் இருக்கும். குடும்பச்சுமையும் அதிகரிக்கும். இதுபோன்ற நேரங்களில் சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. தோல் மற்றும் வயிறு சம்பந்தப்பட்ட நோய் தோன்றி மறையும். தொழில் தொடர்பாக எடுக்கும் முயற்சிகளில் புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ள முன்வருவீர்கள், குரு வக்கிர நிவர்த்தியால் பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். தொழில் ரீதியாக எடுத்த புதிய முயற்சிக்கு மாற்றினத்தவர் ஒத்துழைப்பு கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்காலக் கனவை நனவாக்குவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலிடத்து ஆதரவு கூடுதலாக கிடைக்கும். சலுகைகளைப் பெற்று சந்தோஷமடைவீர்கள். புதிய திருப்பங்கள் பலவற்றையும் சந்திக்கும் விதத்தில் கிரகங்களின் சஞ்சாரம் இருக்கிறது.

**தனுசு - புதன் சஞ்சாரம்**

கார்த்திகை 12 ஆம் திகதி எதிர்பார்த்த காரியங்கள் எளிதில் நடைபெறும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். சேமிப்பு உயரும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். நம்பிக்கைக்குரிய நண்பர்கள் மூலம் சில பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்படலாம். பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமாக நடைபெற்ற பஞ்சாயத்துக்கள் இப்பொழுது நல்ல முடிவிற்கு வரும். அண்ணன், தம்பிகள் ஆதரவோடு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. "பழைய வாகனங்கள் பழுதாகிப் பழுதாகிச் செலவு வைக்கின்றதே" என்று கருதிப் புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும்.

**ரிஷப -செவ்வாய் சஞ்சாரம்**

கார்த்திகை 13 ஆம் திகதி செவ்வாய், வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. சுக ஸ்தானத்தில் வக்கிரம் பெறுவதால் சுகக்கேடுகள் அதிகரிக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் குறையும். நீண்ட நாட்களுக்கு முன் நடைபெற்ற பிரச்சினை மீண்டும் தலைதூக்கலாம். பணிபுரியும் இடத்தில் சகபணியாளர்களால் தொல்லைகள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு குறையலாம். இதனால்இனிமை தராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

கார்த்திகை 21 ஆம் திகதி, சுக்கிரன், லாப ஸ்தானத்திற்கு வருவது நல்ல நேரம்தான். பொருளாதார நிலை உயரும். புதிய வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து காரியங்களை முடித்துக்கொடுப்பர். பணிபுரியும் இடத்தில் உங்கள் கை மேலோங்கும். ஆடை, ஆபரண சேர்க்கையுண்டு. இம்மாதம் பஞ்சமி திதியில் வைரவர் வழிபாடு செய்து வழிபாட்டால் நன்மைகள் வந்து சேரும்.

## மீனம்

**நினைத்ததை அடைய நிதானத்தைக் கடைப்பிடிக்கும் மீன இராசிவாசகர்களே!**

குரு வக்கிர நிவர்த்தியாகி உங்கள் இராசியிலேயே பலம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். எனவே ஆரோக்கியம் சீராகும்.

**சனி மற்றும் குருவின் சஞ்சாரம்**

சனி லாப ஸ்தானத்தில் பலம் பெறும் இந்த நேரத்தில் தொழிலில் லாபம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து வருமானம் உயர வழிவகுத்துக் கொடுப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அரசு வேலைக்கான முயற்சியில் ஈடுபாடு கொண்டிருந்தால் அது கிடைக்கும். இந்த இக்கட்டான சூழ்நிலையில் எந்த முடிவும் எடுக்க இயலாது. அதே நேரத்தில் அனுபவஸ்தர்களின் ஆலோசனை கைகொடுக்கும். குரு, வக்கிர நிவர்த்தியானதால் இதுவரை சிக்கனத்தைக் கடைப்பிடித்து வந்த நீங்கள் இனி செலவிற்கு அஞ்ச மாட்டீர்கள். தக்க தருணத்தில் நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். தடைகளும் தாமதங்களும் விலகி ஓடும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும். உடன்பிறந்தவர்கள் பகை மாறும். புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பொருளாதாரத்தில் மித மிஞ்சிய நிலையும் குருவின் சஞ்சாரத்தால் கிடைக்கும்.

**தனுசு-புதன் சஞ்சாரம்**

கார்த்திகை 12 ஆம் திகதி புதன், 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வங்கிகளின் ஒத்துழைப்பு அல்லது வள்ளல்களின் ஒத்துழைப்போடு தொழிலில் வளர்ச்சியைக் காண்பீர்கள். வாடகைக் கட்டடத்தில் நடந்த தொழில் இனி சொந்தக் கட்டடத்திற்கு மாறும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். இடம் வாங்கி மனை கட்ட வேண்டும் என்ற எண்ணம் கைகூடும். விலகிச் சென்ற நண்பர்கள் விரும்பி வந்து இணைவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

கார்த்திகை 13 ஆம் திகதி சகாய ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் பெற்று சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. வருமானப் பற்றாக்குறை ஏற்படும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழல் உருவாகும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள மாட்டார்கள். சொத்துப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். வாசல் தேடி வந்த வரன்கள் கைநழுவிச் செல்லலாம். எதையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செய்வது நல்லது. பணிபுரியும் இடத்தில் பணப்பொறுப்பில் இருப்பவர்கள் மிகுந்த கவனத்துடன் இருப்பது நல்லது.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

கார்த்திகை 21 ஆம் திகதி, சுக்கிரன். தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது, எதிர்பாராத இழப்புகளையும் விரயங்களையும் சந்திக்க நேரிடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. பெண்வழிப் பிரச்சினைகள் மற்றும் குடும்பத்தினர்களின் பகை அதிகரிக்கும். நிதானமும் பொறுமையும் தேவைப்படும் நேரம் இது. சேமிப்பு கரையும். இம்மாதம் நவக்கிரகத்தில் உள்ள ராகு- கேதுக்களை வழிபடுவதன் மூலம் நன்மைகளைப் பெறலாம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிமல் லன்சாவை தாக்க முயற்சி

# சபையில் இருந்து சமிந்த விஜேசிறியை வெளியேறுமாறு சபாநாயகர் பணிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியை சபையை விட்டு வெளியேறுமாறு சபாநாயகர் அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை காலை ஆரம்பமானதும் வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா உரையாற்றினார்.

இதன்போது அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தாக்க முயற்சித்துள்ளார்.


இதனையடுத்து, அவரை சபையைவிட்டு வெளியேறுமாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்துள்ளார்.

இதன்படி சமிந்த விஜேசிறி நேற்றைய முழு நாள் விவாத நிகழ்வில் பங்கேற்க முடியாது என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலை பிற்போடும் திட்டம் இருப்பதாக கூறி பாராளுமன்றில் இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களின் போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, உள்ளூராட்சி தேர்தலை பிற்போடும் திட்டம் இல்லையென்றும் எனினும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்றும் நிமல் லன்சா தெரிவித்துள்ளார். இதன்போதே, அவரை சமிந்த விஜேசிறி தாக்குவதற்கு முயற்சித்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இலங்கையில் குவியும் சுற்றுலா பயணிகள்



(கொழும்பு)

நாளாந்தம் இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கையானது கடந்த மாதங்களை விடவும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் கடந்த காலப் பகுதியைக் கருத்தில் கொண்டு சுற்றுலா பயணிகளின் தினசரி வருகை பதிவு செய்யப்படுவதாகவும் குறித்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சராசரியாக நாள் ஒன்றுக்கு சுமார் 2000 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகை தருவதோடு இம்மாதத்தில் இது வரை 27,213 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் ரஷ்ய நாட்டை சேர்ந்தவர்கள் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கையானது நாளொன்றுக்கு சுமார் 1800 வரையில் அதிகரித்துக் காணப்படுவதாகவும் குறித்த அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. (நி)

# 4 ஆயிரம் இலங்கை தாதியர்களுக்கு சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

## சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கப்பூரில் அடுத்த வருடம் 4 ஆயிரம் இலங்கை தாதியர்கள் வேலைக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு சிங்கப்பூர் சுகாதாரத் துறையில் பணியாற்றும் வாய்ப்பு இலங்கையர்களுக்கு கிடைத்துள்ளது.

இந்த நிலையில் இங்குள்ள அடிப்படை செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக சிங்கப்பூர் சுகாதார அமைச்சின் 10 அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக மருத்துவர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (நி)



## குரங்கு அம்மைக்கும் தடுப்பூசி தயார்

(லண்டன்)

பவேரியன் நோர்டிக் தடுப்பூசி குரங்கு அம்மை காய்ச்சலுக்கு எதிரான வெற்றிகரமான தடுப்பூசி என்று இங்கிலாந்தின் சுகாதாரத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜூலை 4 முதல் நவம்பர் 3 வரை பகுப்பாய்வு மூலம் வெளியிடப்பட்ட தரவு தடுப்பூசியின் ஒரு டோஸ் தடுப்பூசிக்கு 14 நாட்களுக்குப் பிறகு வைரஸிற்கு எதிராக 78% பாதுகாப்பை வழங்குகிறது என்பதைக் காட்டுகிறது.

மேலும், இங்கிலாந்து சுகாதார தலைவர்கள் தடுப்பூசியின் இரண்டாவது டோஸிலிருந்து நீண்டகால பாதுகாப்பை எதிர்பார்ப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

# அரச அச்சக ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கல் பிரச்சினையை முன்வைத்து அரச அச்சக ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அரசாங்க செய்தியாளர் சங்கத்தின் பிரதிநிதி நுவான் புத்திக, இந்த நெருக்கடி தொடர்பில் தமது ஊழியர்கள் பல மாதங்களாக கலந்துரையாடிய போதும் தீர்வு கிடைக்கவில்லை என தெரிவித்தார்.

தொடர்ச்சியாக அச்சக ஊழியர்கள் போராட்டம் நடத்தினால் பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட அச்சுப் பதிப்பு வேலைகள் பாதிக்கப்படும் என கல்விச் சமூகத்தினர் அச்சம் வெளியிட்டுள்ளனர். (நி)

# நாணய நெருக்கடியில் இலங்கை ஜப்பானிய வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

நாணய நெருக்கடியில் இலங்கை உட்பட 7 நாடுகள் ஆபத்தில் இருப்பதாக ஜப்பானிய வங்கியான நொமுரா ஹோல் டிங்ஸ் இந்த எச்சரிக்கையை விடு த்துள்ளது. இதன்படி, இலங்கை, எகிப்து, ரொமேனியா, துருக்கி, செக் மக்கள் குடியரசு, பாகிஸ்தான் மற்றும் ஹங் கேரி ஆகியனவே நாணயப் பிரச்சினை யில் ஆபத்தில் இருப்பதாக குறித்த வங்கி குறிப்பிட்டுள்ளது.

ஜப்பானிய வங்கி வழங்கியுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (நி)

# வரவு-செலவு திட்டத்திற்கு ஆதரவு; துமிந்தவிற்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க கட்சியின் மத்திய குழு எடுத்த தீர்மானம் தமக்கும் பொருந்தும் என்றும் தானும் மத்திய குழுவில் பங்குபற்றியதாகவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் கட்சியின் ஆட்சியை பிடிப்பாரா என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மைத்திரிபால சிறிசேன, அது தொடர்பில் அச்சம் இல்லை எவரும் கட்சியில் இணையலாம் எனத் தெரிவித்தார். (நி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# வெள்ளைப்பூண்டு

தாரவரவியற் பெயர்- Allium Sativum
குடும்பம்-Liliaceae



இது இலங்கையில் பெரிய அளவில் பயிரிடப்படாவிட்டாலும் இந்தியாவில்பெரும்பாலும்எல்லா இடங்களிலும்பயிராகும்பூண்டு. ஆனாலும் எல்லா இல்லங்களிலும் உணவுக்கூறுகளில் பயன்படுத்தப்படுகிறது. நீலகிரியில் இருந்து வரும் பூண்டிற்கு மருத்துவ பண்புகள் அதிகம். பூண்டின் தாயகம் மத்திய ஆசியா ஆகும். இது ஒரு மருவகுறுஞ்செடியாகும். குமிழ் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

பிரசவித்த பெண்களுக்கு 'சரக்கு' அரைத்துக் கொடுக்கும் பழக்கம் உண்டு. இச்சரக்கில் உள்ளியும் சேர்க்கப்படுகிறது. இதனால் கர்ப்பாசயம் வலுப்பெரும். கர்ப்பாசயக் கழிவுகள் வெளியேறும். தாய்ப்பாலை அதிகம் சுரக்கச் செய்யும். இதனால்தான் 'ஏந்தினைக் கீருள்ளி ஏற்ற முலைப்பாலே' என்ற பழமொழியும் உண்டு.

உள்ளியில் கந்தகச்சத்து கணிசமான அளவு உள்ளது. உள்ளியின் மணத்திற்கு இதுவே காரணம். கந்தகத்திற்கு விரண மாற்றி செய்கை உள்ளது.எனவே மாதவிடாய், பிரசவம் என்பவற்றை அடுத்து கர்ப்பாசயதில் ஏற்படும் புண்களை ஆற்றுவதில் இது உணவு மருந்தாக அமைகிறது. இதன் குமிழில் பூண்டுப் பற்கள் என்னும் (cloves) பகுதிகள் உள்ளன. இவற்றை நசுக்கினால்நெடியான வாசனை வரும். இதுவே இதன் மருத்துவப் பண்பு களின் அடிப்படையாகிறது.

நுண்ணுயிர் எதிர்ப்பு மருத்துவ தயாரிப்பிற்கு ஆதிகாலத்தில் பூண்டு அனைத்து வகையான நோய்களுக்கும் மருந்தாக பயன்படுத்தப்பட்டது. பூண்டு ரசம் உடல் வலியை போக்கும். பூண்டு ஒரு காயகல்ப மூலிகையாகும்.நீண்ட ஆயுளைப் பெற விரும்புவோர் ஏதாவது ஒரு விதத்தில் பூண்டை தங்கள் உணவோடு அன்றாடம் சேர்த்துக் கொள்ள வேண்டும். வெள்ளைப்பூண்டு, மிளகு, பனை வெல்லம் ஒவ்வொன்றும் 2 கிராம் எடுத்து அரைத்துச் சாப்பிட்டால் வாய்வுக் கோளாறுகள் தீரும்.

வெள்ளைப்பூண்டு 2 பல்லுடன் சிறிது வாறநிவாரணி இலைகளைச் சேர்த்து அரைத்து சாப்பிட்டால் மூட்டுவாதம் மற்றும் இதய நோய்கள் குணமாகும்.

வெள்ளைப்பூண்டு 3 பல்லு, கடுகு 1/4 தேக்கரண்டி இரண்டையும் சிறிது தேங்காய் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி அதை நெஞ்சுப் பகுதியில் தேய்த்தால் மார்புச்சளி கரையும்.

நல்லெண்ணெயில் சிறிது பூண்டு சேர்த்து காய்ச்சி வடிகட்டி கொள்ளவும். இதில் இரண்டு சொட்டுக்களை காதில்விட்டால்காது வலி, காது இரைச்சல் குணமாகும்.

பூண்டு, சிறிது உப்பு இரண்டையும் சூடுபடுத்தி பூண்டை இடித்து சாறு எடுத்து அதை சுழுக்கு ஏற்பட்ட இடத்தில் தடவினால் சுழுக்கு குணமாகும்.

பூண்டை நன்றாக அரைத்து கட்டிகள் மீது வைத்து கட்டினால் அவை உடனே குணமாகும். பூண்டு பற்களை பசுப்பாலில் போட்டு வேக வைத்து பூண்டையும் சாப்பிட்டு பாலையும் பருகி வர வாயுத் தொல்லை நீங்கும்.

பூண்டு, வெங்காயம் இரண்டையும் சேர்த்து அரைத்து நகச்சுற்றின் மீது பூசினால் நகச்சுற்று விரைவில் குணமாகும்.

பூண்டு, வெங்காயம் இரண்டையும் சம அளவாக எடுத்து நெய்யில் வதக்கி சாப்பிட்டு வந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

பூண்டை வெள்ளாட்டுப் பாலில் கலந்து வேக வைத்து பாலையும் அருந்தி பூண்டையும் சாப்பிட்டு வர சிறுநீர் கடுப்பு தீரும்.

பூண்டுச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இரண்டையும் சம அளவு எடுத்து படை, சிரங்கு மீது தடவி வந்தால் அவை விரைவில் குணமாகும். பூண்டை உணவில் அதிகமாக சேர்த்துக் கொண்டால் இரத்த அழுத்தம் சீராகும்.

25 கிராம் பூண்டை தோல் நீக்கி சிறு சிறு கீற்றாக வெட்டி 300 மில்லி தூய தேனில் போட்டு 2 கிழமைகள் ஊறவிட்டு பின்பு ஒரு தேக்கரண்டி வீதம் தினமும் சாப்பிட்டு வர உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

பிரசவித்த பெண்களுக்கு பூண்டு லேகியம் சிறந்த மருந்து. இதற்கு சுக்கு 25 கிராம், திப்பிலி 5கிராம், முறுக்கு திப்பிலி 5 கிராம், ஓமம் 2 தேக்கரண்டி, வாய் விளக்கும் 2 கிராம், கருப்பட்டி வெல்லம் 250 கிராம் சேர்த்து வெல்லம் தவிர மற்றைய ஆக்குகளை லேசாக வறுத்து பொடித்து அரித்து வைத்துக் கொண்டு தோல் நீக்கிய பூண்டு 12 பற்களை 200 மில்லி பாலில் வேக வைத்து மத்தால் கடைந்து கருப்பட்டி பொடி செய்த சரக்கு, தேன் கலந்து கிளறி லேகியமாகத் தயாரித்து 1 தேக்கரண்டி பிரசவித்த பெண்களுக்கு காலையில் மட்டும் வாரத்தில் 3 நாட்கள் தொடர்ச்சியாக 7 வாரம் கொடுத்து வர கர்ப்பப்பைக் கோளாறுகள் ஏற்படாது. பசி எடுக்கும். தாய்ப்பால் கூடுதலாக சுரக்கும்.

பூண்டைத் தோல் நீக்கி மை போல் அரைத்து சுத்தமான பருத்தித்துணியில் பூசி திரி போல் திரித்து உருக்கி வரும் எண்ணெய்யை தூய தேனில் கலந்து வாய்ப்புண்ணிற்கு பூசி வர வாய்ப்புண்ணுகள் ஆறும். ஒரு டம்ளர் பசுப்பாலில் 10 பற்கள் உரித்த பூண்டை போட்டு நன்கு வேக வைத்து அதில் 1/2 தேக்கரண்டி பனை கற்கண்டை போட்டு கலக்கி பூண்டை எடுத்து மென்று தின்று பாலைக் குடிக்க இரத்தம் விருத்தியாகும். இரத்த அழுத்தம் குறையும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha) India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# மரவளமும் மனைவளமும் மனவளமும் மனிதமதை புனிதப்படுத்தும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாயபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

கார்த்திகை மாதம் மனிதத்தை மகிழ்வுபடுத்தும் உன்னதமான மாதம். கார்த்திகைப் பெண்கள் ஒன்றுகூடி திருவிளக்கேற்றும் தீபத்திருநாளோடு சேர்ந்து எமது உறவுகளை நினைந்து பார்த்து உணர்வுகளுடன் சங்கமிக்கும் நாளும் கூட. நாம் வாழும் தேசம் உலர்வலயம்.

வரண்டபூமி வானம் மகிழ்ந்து மழை தரும் காலம். வயல் காட்டில் நெல்விதைத்து நெல் வளர்ந்து மெதுவாக தலையசைக்கும் காலம். உலர் வலயம் பச்சைப் பசேல் என மனதுக்கு காட்சி தரும் இனிய காலம்.

தொலைதூரத்திலிருந்து பணிக்கு பாடசாலைக்குச் செல்பவர்கள் வயல் காட்டை தாண்டிச் செல்கையில் மெதுவாக குளிர் காற்றில் பச்சைப் பசேலென விரிந்து கிடக்கும் வயல் நிலங்களை கண்டுகளித்து மனதை ரம்மியமாக வைத்திருக்கும் காலம்.

மரங்கள் அனைத்தும் இலைகளைக் கொட்டித் துளிர்ப்பதற்காக காத்திருக்கும் காலம். அதுபோல நாமும் எம்முள் இருக்கும் அழுக்குகளை, கோபத்தை, வன்மத்தை கொட்டி புத்துயிர் கொள்ள வேண்டும்.

மரத்திற்கும் மனத்திற்கும் உள்ள நீண்ட உறவை பேணுகின்ற புதுப்பிக்கின்ற காலம் என்றாலும் மிகையாகாது. மரம், மனை, மனம் இணைந்த மும்முனை சங்கமத்திற்கான பெறுமதியான செயற்பொதியாக பரிந்துரைக்கப்பட்டது தான் மனை வேளாண்மை (Family



Farming).

மனைத் தோட்டத்தின் பேண்தகு நிலையாக கருதப் படுகின்றதுதான் மனைத் தோட்டம். (Home hardening).

இம்மாதத்தில் மழை வீழ்ச்சி அதிகமாக இருக்கும். எமது நாட்டைப் பொறுத்தவரையில் காலபோகத்தின் இடைப்பகுதி மாதம் மும்மாரி தவறாமல் பெய்கின்ற காலம். சிலவேளைகளில் அது தவறி வெள்ளம் போடும் காலமும் கூட. அதனால் எமது காரியங்களை மழையைப் பார்த்து நாமே அனுசரித்துச் செய்ய வேண்டிய நிலையும் பல தடவைகளில் ஏற்படுவதுண்டு. வருண பகவானின் அருளாட்சி கிடைக்கின்ற காலத்தில்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

இயற்கையை நேசிக்கும் அனைவரும் மரங்களை நடுகை செய்வது வழக்கம். குழுக்களாக, குடும்பமாக திணைக்களங்களிலும் தரிசு நிலங்களிலும் அவரவர் மனைகளிலும் மரங்களை நடுகை செய்து அதன் பலனை தினந்தினம் அனுபவிப்பதுண்டு.

வெயில் காலத்தில் இவ்வாறான மரங்கள் எமக்கான குளிர்மையான சூழலை தானாகவே தந்து அதனுடன் காய், கனி, இலை, குழை என்பனவற்றையும் எமக்கு நாம் கேளாமலேயே தருகின்றதனை காணலாம்.

கேளுங்கள் தரப்படும் எனத் தானே நாம் படித்திருக்கின்றோம். ஆனால் கேளாமலேயே தருகின்ற மனதொத்த கைங்கரியம் மரத்துக்கும் இடையில் நடைபெறுகின்றதல்லவா. இந்த புனிதமான பந்தந்தை இணைக்கின்ற ஊடகமாக மனையைக் கருதலாம்.

தொட்டிலில் தொடங்கி கட்டையில் வேகும் வரை மரமும் மனிதனும் ஒன்றாகவே பயணிக்கின்றனர். ஆனால் இடையில் மரத்தின் புனிதத்தை மறந்து மரக்கட்டையாகவே ஆகிவிடுகின்றோம்.

இறந்தும் பயன் தருகின்ற உயிர்களில் மரமும் ஒன்று. பணிபுரிகின்ற இடங்களில் அல்லது மாணவர்களை இணைத்து கல்விச்சாலைகளில் இன்னும் நாம் மகிழ்ச்சியாக வாழுகின்ற மனைகளில் மர நடுகை செய்ய ஊக்குவிக்கும் காலமாதலால் அதனை அனைவரும் ஒன்றிணைந்து செய்ய முயலுவோம். முயற்சி நிச்சயம் திருவினையாக்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிப்பாறைகளைத் தகர்க்கும் அணுசக்தி கப்பல்கள்
# சோதனையை நடத்தியது ரஷ்யா



(மொஸ்கோ)
பனிமலையை தகர்க்கக் கூடிய அணுசக்தி சோதனையை ரஷ்யா நடத்தியுள்ளது.

அணுசக்தியால் இயங்கும் இரண்டு கப்பல்கள் புனித பீட்டர் ஸ்பர்க்கில் இந்த சோதனையை மேற்கொண்டன.

இதன் மூலம் ஆர்க்டிக் பகுதியில் தனது பலத்தை ரஷ்யா வெளிப்படுத்தியுள்ளது.

இதற்கான நிகழ்வில் காணொலி வாயிலாக ரஷ்ய ஜனாதிபதி புடின் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

நாட்டுக்கு இத்தகைய பனி தகர்ப்பு சோதனைகள் அவசியம் என அவர் இதன் போது தெரிவித்துள்ளார். (நி)

## கிரீஸ் கடற்பகுதியில் தத்தளித்த 400 இற்கும் மேற்பட்டவர்கள் மீட்பு



(கிரீஸ்)
கிரீஸ் கடற்பகுதியில் மீன்பிடி படகுகளில் தத்தளித்துக் கொண்டிருந்த நூற்றுகணக்கான புலம்பெயர்ந்தவர்களை அந்நாட்டு கடற்படையினர் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

கிரீஸின் கிரீட் தீவில் பலத்த காற்றில் சிக்கி இரண்டு படகுகள் தத்தளித்துக் கொண்டிருந்தன.

இதனையடுத்து அங்கு விரைந்த கிரீஸ் கடற்படையினர் படகுகளில் இருந்த 400 இற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தவர்களை மீட்டனர்.

அவர்கள் லிபியாவில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. மீட்கப்பட்டவர்கள் கிரீஸின் தெற்கு கடலோர நகரமான பேலியோச் சோராவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (நி)

## இந்தோனேசியா நிலநடுக்கம் உயிரிழப்பு 268 ஆக உயர்வு



(ஜகார்த்தா)
இந்தோனேசியாவின் மக்கள் தொகை மிகுந்த பிரதான தீவான ஜாவாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 268 ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும், ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர். அந்நாட்டின் தேசிய பேரிடர் தணிப்பு நிறுவனம் 151 பேரைக் காணவில்லை என்றும் தெரிவித்துள்ளது. (நி)

## துருக்கியில் நிலநடுக்கம்
## 35 பேர் காயம்

(அங்காரா)
துருக்கியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

டூஸ் நகருக்கு அருகே நேற்று அதிகாலை 4.08 மணிக்கு 5.9 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய பேரிடர் மற்றும் அவசரநிலை .மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் கோலியாகா மாவட்டத்தில் மையம் கொண்டிருந்ததாகவும் 6.81 கி.மீ ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் இஸ்தான்புல் மற்றும் தலைநகர் அங்காராவிலும் உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மொத்தம் 18 அதிர்வுகள் ஏற்பட்டதாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறித்த பகுதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## சவுதி அரேபியாவில் 12 நாட்களில்
### 17 பேருக்கு மரண தண்டனை!

(ஜகார்த்தா)
சவுதியில் கடந்த 12 நாட்களில் மட்டும் 17 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக ஐ.நா சபையின் மனித உரிமை அலுவலகம் தெரிவித்துள்ளது. உலகில் மரண தண்டனையை தீவிரமாக செயற்படுத்தும் அரசுகளில் முதன்மையானது சவுதி அரேபியா.

அந்நாட்டில் நிகழ்த்தப்படும் மரண தண்டனைக்கு ஐ.நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் தொடர் கண்டனத்தை தெரிவித்து வருகின்ற போதிலும் சவுதியில் கடந்த 12 நாட்களில் மட்டும் 17 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதில் 15 பேர் போதைப் பொருள் பயன்பாட்டிற்காக தண்டிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் வாளால் கழுத்து துண்டிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சர்வதேச அமைப்புகளுக்கு தந்த வாக்குறுதிகளை மீறி சவுதி அரேபியா மரண தண்டனையை தொடர்ந்து அதிக அளவில் நிறைவேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2022 ஆம் ஆண்டில் மட்டும் 139 பேருக்கு சவுதி அரசு மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது.

2021 இல் இந்த எண்ணிக்கை 69 ஆக இருந்தது. கொவிட் பெருந்தொற்று தொடங்கிய 2020 இல் 27 பேருக்கும், 2019 இல் 187 பேருக்கும் மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது.

உலக நாடுகள் அனைத்தும் உலகக் கோப்பை கால்பந்து விளையாட்டில் கவனம் செலுத்தி வரும் இந்த வேளையில், சவுதி அரசு மனிதத் தன்மை இல்லாமல் கொடூரமான தண்டனையை வேகமாக நிறைவேற்றி வருவதாக மனித உரிமை ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். (நி)

## வரலாறு காணாத அளவுக்கு கடும் பனிப்பொழிவு நியூயோர்க் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனம்





(வோஷிங்டன்)
அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு காரணமாக நியூயோர்க் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. குறிப்பாக நியூயோர்க் மாகாணத்தில் வரலாறு காணாத அளவுக்கு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

மாகாணம் முழுவதும் பலத்த காற்றுடன் பனி கொட்டி வருகிறது. அங்குள்ள எரி நகரில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 24 மணி நேரத்தில் 180 செ.மீ பனிப்பொழிவு ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் சாலைகள், வீடுகள், வாகனங்கள் பனிப் போர்வை போர்த்தி காட்சியளிக்கின்றன. குளிர் வாட்டி வருவதால் மக்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கியுள்ளனர்.

இதனால் அவர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் குவிந்துள்ள பனியை அப்புறப்படுத்தப்படும் பணிகள் நடந்து வருகின்றன.

இதனிடையே கடுமையான பனிப்பொழிவை எதிர்கொண்டுள்ள நியூயோர்க் மாகாணத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளார்.

அங்கு பனிப்பொழிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை துரிதப்படுத்த அவர் உத்தரவிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 108

### யார் பணக்காரன்? யார் ஏழை?



இதென்ன கேள்வி... பணம் நிறைய வைத்திருப்பவன் பணக்காரன். கஷ்டப்படுபவன் ஏழை. அது தானே உங்கள் பதில்? இந்த பதில் சரியா?

ஒரு பெரிய சீமாட்டி புடைவைக் கடைக்குச் சென்று "எனக்கு கொஞ்சம் பட்டுச் சேலைகள் காட்டுங்கள். விலை மலிவாக இருக்கட்டும். என் மகன் திருமணத்திற்காக வீட்டுவேலைக்காரிக்கு கொடுக்கவேண்டும்..." எனக் கூறினாள்.

வேலை பார்ப்பவர்கள் எடுத்து போட்ட புடைவைகளில் மலிவானதாக ஒன்றை தெரிவு செய்து பணத்தை கட்டிவிட்டு எடுத்துச் சென்றாள். சற்று நேரம் கழித்து அதே கடைக்கு வேலைக்காரி வருகிறாள். என் முதலாளியம்மா மகனுக்கு கல்யாணம். நல்ல சேலையா ஒன்னு அவங்களுக்கு எடுத்து கொடுக்கணும். விலை அதிகமாக கூட இருந்தாலும் பரவாயில்லை. நல்ல டிசைன்ஸ் எடுத்துப் போடுங்க"

ஒரு பெரிய இடத்துப் பெண், ஒருமுறை சுற்றுலாவுக்காக சென்ற இடத்தில ஒரு ஸ்டார் ஹோட்டலில் தங்கியிருந்தாள். அவளது கைக்குழந்தை திடீரென பாலுக்காக அழ, ஹோட்டல் நிர்வாகத்திடம் "குழந்தைக்கு பால் கிடைக்குமா?" எனக் கேட்டாள்.

கிடைக்கும். ஆனால் ஒரு கப் நூறு ரூபாய் ஆகும்" எனக் கூறினார்கள்.

"பரவாயில்லை... உடனே ஒரு கப் வேண்டும்" என்று கூறி ஆர்டர் செய்து பாலை வரவழைத்தாள். அவள் ஊருக்கு திரும்பிப் போகும்போது வழியில் மறுபடியும் குழந்தை பாலுக்காக அழ, சாலையோரம் இருந்த ஒரு டீக்கடையில் காரை நிறுத்தி, பால் கிடைக்குமா என்று விசாரித்தாள். "பசும்பாலே இருக்கு அம்மா" எனக் கூறி பசும்பால் கொடுத்தார்.

அதற்கு எவ்வளவு பணம் எனக்கேட்க "பணம் வேண்டாம்மா... குழந்தைங்க குடிக்கிற பாலுக்கு நான் காசு வாங்குறதில்லை" என்று பதில் சொல்லிவிட்டு, "இன்னும் வேணும்னாலும் தருகிறேன். போற வ்ழியில குழந்தை அழுதா என்ன பண்ணுவீங்க" என்றார் பரிவுடன் கூறினார்.

அலுவலகத்துக்கு புறப்படும்போது தான் அந்த இளைஞன் கவனித்தான். செருப்பு பிய்ந்துபோயிருந்ததை.

பிரதான சாலை வந்ததும் அந்த செருப்பை தைக்க செருப்பு தைப்பவரை தேடிச் சென்றான். ஒரு நபர் சாலையோரம் ஒரு குடைக்கு கீழே செருப்புக்களை தைத்தபடி அமர்ந்திருந்தார்.

வண்டியை அவர் முன் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி, செருப்பை அவர் முன் போட்டவன், "இதை கொஞ்சம் தைச்சு கொடுங்க."எவ்ளோப்பா ஆகும்?" செருப்பை வாங்கி ஆராய்ந்த அந்த தொழிலாளி, "இருபது ரூபா ஆகும் சார்..." "இருபது ரூபாயா? பத்து ரூபாய் வாங்கிக்கோங்க..." அந்த இளைஞரை சற்று தலையை நிமிர்த்தி பார்த்தார். கதிரவனின் கதிர்கள் சுட்டெரித்தது. சரியாக பார்க்க முடியவில்லை.

இளைஞனின் பேரம் தொடர்ந்துகொண்டிருந்தது. இதனிடையே... டீஆர்டர்எடுக்கபக்கத்து டீக்கடைசிறுவன்வந்தான்... "ஒரு டீ கொண்டு வாப்பா... சார் டீ சாப்பிடுறீங்களா?"

அந்த இளைஞனின் பதிலுக்கு காத்திராமல், "சேருக்கும் ஒரு டீ சேர்த்து ரெண்டு டீ கொண்டுவாப்பா... எனக் கூற

"பரவாயில்லை சேர்.. சாப்பிடுங்க... நல்லா இருக்கும்.

சற்று நேரத்தில் சூடான டீ வந்தது.

அந்தப் பெரியவரிடம் பத்து ரூபாய்க்கு பேரம் பேசிய அந்த இளைஞன் நெளிந்தபடி அந்த டீயை அருந்தினான்.செருப்பு தைத்து முடித்த பிறகு, பைசா கொடுக்கும்போது சாப்பிட்ட டீக்கும் சேர்த்து தர, அந்த பெரியவர் சொன்னார்... "செருப்பு தைச்சதுக்கு மட்டும் காசு கொடுங்க... டீக்கு வேண்டாம்... என்னோட கஸ்டமர் நீங்க, உங்களை உபசரிக்கிறது என்னோட கடமை..." என்றார்.

பணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒருவர் பணக்காராகி விடமுடியாது. அதே நேரம், பணம் இல்லாததால் ஒருவர் ஏழையும் கிடையாது.

# இறக்குமதி செய்யப்பட்ட கச்சா எண்ணெயில் குழப்பம் செயல் இழந்தது சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம்

(கொழும்பு)

கடலில் இருந்த கச்சா எண்ணெய் கப்பல் ஏறக்குறைய 55 நாட்கள் தாமதக் கட்டணம் செலுத்தி இறக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு மேலாகியும், நேற்று முன்தினம் வரை சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தை இயக்க முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

99,000 மெற்றிக் தொன் கொண்ட தரையிறங்கிய ரஷ்யக் கப்பலின் கச்சா எண்ணெய் மிகவும் தடிப்பாக இருப்பதால், மற்றொரு மார்பன் ரக கச்சா எண்ணெய் கப்பலை கொண்டு வந்து கலக்கி பயன்படுத்த வேண்டியிருப்பதால் சுத்திகரிப்பு நிலைய் பணியை தொடங்க முடியவில்லை என சுத்திகரிப்பு ஆலை ஊழியர்கள் தெரிவித்தனர். (நி)

# பொருளாதார பிரச்சினை முடிவடைந்த பின்னரே தேர்தல்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணாமல் தேர்தலுக்கு செல்வது சாத்தியமில்லை என ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதாரப் பிரச்சினை முடிவடைந்த பின்னர் தேர்தலுக்குச் செல்ல முடியும் என, பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்புகள் நிறைவடைந்த பின்னர், அனைத்து கட்சி கூட்டத்தை அழைக்க திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் டிசெம்பர் 11 ஆம் திகதிக்கு பின்னர்இதுதொடர்பான கூட்டத்தை கூட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்தசுதந்திர தினத்திற்கு முன்னதாக இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும். இல்லையேல் தீர்வைக் காணுவதற்கு 2048 ஆம் ஆண்டுவரை செல்லவேண்டியிருக்கும். இதற்காக தமிழ் சமூகத்தின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதே போன்று சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் நியாயமான அச்சங்கள் போக்கப்பட வேண்டும். அத்துடன் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும் எனவும ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா:சூரி 2 செவ் 1 இல்
தகைமை/தொழில்:A/L கனடா
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: B/13137

பிறப்பு:1986 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா:43 ½ சூரி 6 செவ் 1 இல்
உயரம்: 5' 9"
தகைமை/தொழில்: BA,PG,QA (கனடா அரச தொழில்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/13138

பிறப்பு:1976 இந்து
நட்சத்திரம்: ரேவதி 3
கி.பா: சூரி 4 செவ் 6 இல்
தகைமை/தொழில்: A/L கட்டட ஒப்பந்தகாரர்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13139

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா:69 ½ சூரி 5 செவ் 8 இல்
உயரம்: 5' 5"
தகைமை/தொழில்:பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/13141

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரோகினி 2
கி.பா:சூரி 1 செவ் 5 இல்
உயரம்:5' 2"
தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/13174

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா:21 ½ சூரி 9 செவ் 2 இல்
தகைமை/தொழில்:HND in English
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/13176

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா:சூரி 12 செவ் 10 இல்
உயரம்:5' 5"
தகைமை/தொழில்: BSc (Hons) M.L.T
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ:G/13180

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா:சூரி 12 செவ் 10 இல்
உயரம்:5' 4"
தகைமை/தொழில்: A/L மேக்கப்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/13182

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 35



ஏனெனில், சுந்தர சோழ மகாராஜா இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வரையில் நெறி தவறாமல் நாட்டைப் பரிபாலித்து வந்தார்.

நம்மையெல்லாம் நன்கு மதித்து யோசனை கேட்டு ராஜ்யபாரம் நடத்தினார். இதனால் சோழ ராஜ்யம் மேலும் விஸ்தரித்துச் செழித்தது.

இப்போது சுந்தர சோழ மகாராஜாவின் உடல்நிலை கவலைக் கிடமாயிருக்கிறது. இந்த நிலைமையில் அடுத்தபடி பட்டத்துக்குரியவர் யார்? கண்டராதித்த தேவரின் திருக்குமாரர் மதுராந்தகர் இப்போது பிராயம் வந்து ராஜ்ய பரிபாலனம் செய்யக் கூடியவராயிருக்கிறார்.

அறிவினாலும் கல்வியினாலும் குணத்தினாலும் பக்தி சிரத்தையினாலும் எல்லா விதத்திலும் பட்டத்துக்கு தகுந்தவராயிருக்கிறார்.

அவரிலும் ஒரு வயது இளையவரான ஆதித்த கரிகாலர்- சுந்தர சோழரின் புதல்வர்-காஞ்சியில் வடதிசைப் படையின் சேனாதிபதியாக இருந்து வருகிறார்.

இந்த இருவரில் யார் பட்டத்துக்கு வருவது நியாயம்? குலமுறை என்ன? மனு நீதி என்ன? தமிழகத்தின் பழைமையான மரபு என்ன? மூத்தவரின் புதல்வர் மதுராந்தகர் பட்டத்துக்கு வருவது நியாயமா? அல்லது இளையவரின் பேரர் பட்டத்துக்கு வருவது முறைமையா? நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கருத்தை மனம் விட்டுச் சொல்ல வேண்டும்.

"மூத்தவராகிய கண்டராதித்த தேவரின் புதல்வர் மதுராந்தகர் தான் பட்டத்துக்கு உரியவர். அது தான் நியாயம், தர்மம், முறைமை" என்றார் சம்புவரையர். "என் அபிப்பிராயமும் அதுவே", "என் கருத்தும் அதுவே" என்று அக்கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் சொல்லி வந்தார்கள். "உங்கள் அபிப்பிராயம் தான் என் அபிப்பிராயமும். மதுராந்தகருக்குத்தான் பட்டம் உரியது.

ஆனால் அந்த உரிமையை நிலைநாட்டுவதற்காக நாம் ஒவ்வொருவரும் பிரயத்தனம் செய்யச் சித்தமாயிருக்கிறோமா? உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்து போராடச் சித்தமாயிருக்கிறோமா? இந்த நிமிடத்தில் துர்க்காதேவியின் பாதத்தில் ஆணையிட்டு அவ்விதம் சபதம் செய்வதற்குச் சித்தமாயிருக்கிறோமா?" என்று பழுவேட்டரையர் கேட்டபோது அவர் குரலில் அதுவரையில் இல்லாத ஆவேசம் தொனித்தது.

கூட்டத்தில் சிறிது நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. பிறகு சம்புவரையர், "அவ்விதமே தெய்வ சாட்சியாகச் சபதம் கூறச் சித்தமாயிருக்கிறோம். ஆனால் சபதம் எடுத்துக் கொள்வதற்கு முன்னால் ஒரு விடயத்தைத் தாங்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

இளவரசர் மதுராந்தகரின் கருத்து என்ன? அவர் சிங்காதனம் ஏறி ராஜ்ய பாரத்தை ஏற்கச் சித்தமாயிருக்கிறாரா? கண்டராதித்தரின் தவப் புதல்வர் உலக வாழ்க்கையை வெறுத்துச் சிவபக்தியில் பூரணமாக ஈடுபட்டுள்ளார் என்று கேள்விப்படுகிறோம்.

ராஜ்யத்தில் அவருக்கு விருப்பமில்லை என்று பலர் சொல்லவும் கேட்டிருக்கிறோம். அவருடைய அன்னையார் செம்பியன் மாதேவியார் தமது புதல்வர் பட்டத்துக்கு வருவதற்கு முற்றும் விரோதமாயிருக்கிறார் என்றும் கேட்டிருக்கிறோம். தங்களிடமிருந்து இதைப் பற்றிய உண்மையை அறிய விரும்புகிறோம்."

"சரியான கேள்வி; தக்க சமயத்தில் கேட்டீர்கள். இதைத் தெளிவுபடுத்தும் கடமையும் எனக்கு உண்டு. முன்னமே சொல்லியிருக்க வேண்டும். சொல்லத் தவறியதற்காக மன்னியுங்கள்" என்று பீடிகை போட்டுக் கொண்டு பழுவேட்டரையர் கூறத் தொடங்கினார்.

"செம்பியன் மாதேவி தமது ஏக புதல்வரை ராஜ்யபார ஆசையிலிருந்து திருப்பிச் சிவபக்தி மார்க்கத்தில் செலுத்துவதற்குப் பிரயத்தனப்பட்டு வந்தது நாடு அறிந்த விடயம்.

(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்

### அம்புலிமாமா

மணலூர் மணியம் மார்க்கபந்து வழக்கம் போல அன்று மாலை அரச மரமேடை மீது அமர்ந்து தம் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது ஒருவன் வேகவேகமாக வந்து நிற்கவே அவனைத் தம் சம்மந்தி வீட்டு வேலைக்காரன் என்று மார்க்கபந்து கண்டு கொண்டார்.

அவர் தம் மருமகளைப் பிரசவத்திற்கு அடுத்த ஊரிலுள்ள தம் சம்மந்தி வீட்டிற்கு அனுப்பி இருந்தார். எந்த நிமிடத்தில் குழந்தை பிறந்த நற்செய்தி வரும் என்று அவர் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். எனவே அவர் வந்த வேலையாளிடம் "என்ன நல்ல சேதிதானே கொண்டு வந்திருக்கிறாய்?" என்று கேட்கவே அவனும் "ஆமாம் ஐயா! உங்களுக்குப் பேரன் பிறந்திருக்கிறான். இதைத் தெரிவிக்கத்தான் என்னை உங்கள் சம்மந்திப் பெரியவர் அனுப்பினார்" என்றான்.

மார்க்கபந்து ஒரு ரூபாவை எடுத்து அவனிடம் கொடுத்து "இதை வைத்துக் கொள். நீ வீட்டிற்குப் போய் ஒரு பெரிய கூடையைக் கேட்டு வாங்கி எடுத்துக் கொண்டு 'நாராயண விலாஸ்' பட்சணக் கடைக்கு வா" என்றார்.

வேலையாள் சென்றதும் மார்க்கபந்துவும் எழுந்து நாராயண விலாஸிற்குச் சென்றார். அங்கு அதன் உரிமையாளன் நாராயணனே இருந்தான். அவன் மார்க்கபந்துவைக் கண்டதும் எழுந்து "வர வேண்டும். இந்தப் பக்கமே நீங்கள் வெகு நாட்களாக வரவே இல்லை. இன்றுதான் வந்திருக்கிறீர்கள். நான் என்ன செய்ய வேண்டும்? காத்திருக்கிறேன்" என்றான்.

மார்க்கபந்துவும் கண்ணாடி அலுமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த லட்டையும் மைசூர் பாகுவையும் பார்த்து விட்டு "இவை எல்லாம் இன்று தயாரிக்கப்பட்டவைதானே. எனக்கு நூறு லட்டும் நூறு மைசூர்பாகும் வேண்டும்" என்றார்.

நாராயணனும் "எல்லாம் சற்றுமுன் போட்டது. புத்தம்புதுசு. அங்கே சமையலறையில் போட்டதும் இங்கே கொண்டு வந்து வைக்கிறேன். சில நிமிடங்களில் எல்லாம் விற்றுப் போகிறது" என்றான் பெருமையுடன். மார்க்கபந்துவும் "அப்பப்பா! இவற்றைத் தயாரிக்கவும் இப்படி அழகாக அடுக்கி வைக்கவும் மிகவும் சிரமப் பட்டிருப்பாயே" என்று கேட்டார்.

நாராயணனும் "அதை ஏன் கேட்கிறீர்கள்? இவற்றைத் தயாரிக்க என்னவோ ஐந்து மணி நேரம்தான் பிடிக்கிறது. ஆனால் இந்த மைசூர் பாகை ஒழுங்காகக் கட்டிகளாக சீராக நறுக்கி இந்த மாதிரி அழகாகத் தட்டில் அடுக்கி வைக்க இரண்டு நாள் பிடிக்கிறது. இது போல லட்டை அடுக்கி வைக்க இரண்டு நாட்கள் பிடிக்கிறது. வியாபாரம் என்றால் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியுள்ளது பார்த்தீர்களா" என்றான்.

மார்க்கபந்துவும் "ஆமாம் மிகவும் சிரமம்தான்" என்று கூறிப் புன்னகை புரிந்தார். இதற்குள் வேலையாள் பெரிய கூடையை எடுத்துக் கொண்டு வரவே நாராயணன் அவனிடம் "இங்கே கொண்டுவா லட்டையும் மைசூர் பாகையும் அதில் எடுத்து வைக்கிறேன்" என்றான்.

மார்க்கபந்துவோ "வேண்டாம். நீ கூடையை வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போ" என்று கூறவே வேலையாள் போய் விட்டான். அவரும் கிளம்பிப் போய் விட்டார். அப்போது தான் நாராயணனுக்குத் தான் பேச்சு வாக்கில் லட்டையும் மைசூர் பாகையும் பற்றிய உண்மையைக் கூறி விட்டது நினைவிற்கு வந்தது. அவன் தலையில் அடித்துக் கொண்டு 'ஐயோ நல்ல கிராக்கி போய் விட்டதே" என்று புலம்பினான்.



### புத்தம் புதிதா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்;
நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.
- அறிஞர் அண்ணா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆசிரியர்களின் உடை ஆசிரியத்துவத்தின் அடையாளம்

ஆள்பாதி ஆடை பாதி என்பது நம் தமிழ்ப் பழமொழி.

ஆள்பாதி ஆடைபாதி என்பதன் பொருள் ஆழமானது. அர்த்தம் நிறைந்தது.

ஒருவரின் குணவியல்புகளை அவரின் தோற்றத்தை வைத்து அனுமானிக்க முடியும்.

இதனை நம் சாத்திர நூல்கள் சாமுத்திரிகா இலட்சணம் என்று வகையிட்டன.

ஒருவரின் தோற்றம் அவரின் அகத்தூய்மையைப் எடுத்தியம்பும்.

அதேபோல ஒருவர் அணிகின்ற ஆடை என்பது அவரின் கண்ணியத்தைச் சான்று பகரும்

பண்புடைமைமிக்கோர் விரசமான ஆடைகளை ஒருபோதும் ஏற்கமாட்டார்.

ஆக, தூய்மையான பண்பாட்டு விழுமியங்களுடன் இணைந்த ஆடைகளை அணிகின்ற ஒருவரிடம் உயர்ந்த பண்பு இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

அதாவது ஆடை என்பது ஒரு மனிதனை அளவிடக்கூடிய கருவி என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அந்த வகையில் நம் தமிழ்ப் பண்பாட்டில் ஆசிரியரை அடையாளப்படுத்துவது அவர் அணியும் ஆடை என்பதை நாம் எல்லோரும் அறிந்து வைத்திருக்கின்றோம்.

ஆம், வேட்டி, நஷனல், உத்தரியம் என்ற அந்த தமிழ்ப் பண்பாட்டு உடை ஓர் ஆசிரியரை ஆசிரியராக அடையாளப்படுத்தியது.

கூடவே அவரின் கோலம் மற்றவர்களை அறியாமலே அவர் பால் மரியாதையை ஏற்படுத்தியது.

இவ்வாறு ஆசிரியத்துவத்தை அடையாளப்படுத்தி நின்ற அந்த ஆடைக் கலாசாரம் இன்று மலையேறிவிட்டது.

ஆயினும் ஏதொவொரு வகையில் ஆசிரியர்கள் தங்களின் தொழில்சார் தர்மத்தை ஆடைக் கலாசாரத்தில் பின்பற்றி வருகின்றனர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில் சமகாலத்தில் ரீசேட்டும் அரைக் காற்கட்டையும் நம் இளம் சமூகத்தை ஆக்கிரமித்து நிற்பதைக் காணும்போது வேதனை மிகுந்து விடுகிறது.

அதிலும் சில அரச நிறுவனங்களில் கூட ரீசேட் கலாசாரம் புகுந்துவிட்டது.

ஆக, பாடசாலை என்ற கல்விச்சாலைகளில் மட்டுமேனும் பண்பாட்டு நிலையில் ஆடைக் கலாசாரம் வாழ்கிறது என்று திருப்திபடும் வேளையில், இப்போது நாட்டின் பொருளாதார நிலைகருதி அரச தரப்பு ஆசிரியர்கள் அணிகின்ற ஆடை தொடர்பில் சில சலுகைகளை வழங்க முற்பட்டுள்ளமை மிகப்பெரும் துரதிர்ஷ்டமாகும்.

எனவே பொருளாதார நெருக்கடியில் இந்த நாடு அமிழ்ந்துவிடும் என்ற உச்சகட்ட நிலை வந்தாலும். ஆசிரியத்துவத்தின் பெருமை காக்கும் பண்பாட்டு விழுமியம் கொண்ட ஆடை அணிந்து கற்பிக்கின்ற அந்த பெரும் கடமைப்பாட்டை ஆசிரியர்கள் ஒருபோதும் கைவிடலாகாது என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# இலங்கைக்கு சர்வதேசத்திடமிருந்து எவ்வித உதவிகளும் கிடைக்கப்பெறாது

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

அரச நிர்வாகத்தினுள் பாரிய மோசடிக்காரர்கள் இருக்கும் வரை, சர்வதேசத்திடமிருந்து எவ்வித உதவிகளும் கிடைக்கப் பெறாது. ஊழல் மோசடிகள் தீவிரமடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்புவது இலகுவான விடயமல்ல. இலங்கை ஊழலற்ற நாடு என்பதை சர்வதேசத்திற்கு நிரூபிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சு.க. தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், அண்மையில் எதிர்தரப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளினதும்தலைவர்கள்கையெழுத்திட்டு தேர்தல் ஆணைக் குழுவில் கடிதமொன்றை கையளித்துள்ளோம்.

அது மாத்திரமின்றி தனிப்பட்ட ரீதியிலும் ஆணைக்குழுவிற்குச் சென்று தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விரைவில் தேர்தலை நடத்துவதற்கான அவசியம்சமூக மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையிலும் தாக்கம் செலுத்துகிறது. தேர்தல் நடத்தப்பட்டால் மக்கள் ஆட்சியாளர்கள் மீது கொண்டுள்ள கோபம் சற்றேனும் குறைவடையும்.

வாக்களிப்பில் மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவர். தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்ற கொள்கையிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை.

நாம் நடுத்தர வருமானம் பெறும் நாடாக இருந்து, தற்போது குறைந்த வருமானம் பெறும் நாடாக பின்தள்ளப்பட்டுள்ளமை சர்வதேச மட்டத்தில் நாம் பெற்றுக் கொண்ட பாரிய தோல்வியாகும். அரச நிர்வாகத்தினுள் பாரிய மோசடிக்காரர்கள் இருக்கும் வரை, சர்வதேசத்திடமிருந்து எவ்வித உதவிகளும் கிடைக்கப் பெறாது என்றார். (ம-7)

# தமிழர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் பதிவை உடனடியாக நிறுத்தவும்

### சபையில் மனோ எம்.பி தெரிவிப்பு

கொழும்பில் வாழும் தமிழ் மக்களை இலக்குவைத்து பொலிஸார்மேற்கொள்ளும் பதிவு செய்யும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்தவேண்டும்.

தனிப்பட்ட ஒருவரின் தகவலை வேறுயாருக்கும் வழங்க முடியாது என தமிழ்முற்போக்குக்கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம், பாராளுமன்றம் உள்ளிட்ட 16 விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றிய குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

கொழும்பு பிரதேசத்தில் தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் வீடு வீடாக சென்று பிரசாரம் மேற்கொள்வதுபோல, பொலிஸார் வீடுவீடாகச் சென்று பதிவு செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில்யுத்தம்இல்லை. பயங்கரவாத நடவடிக்கை இல்லை. சுதந்திரமாக செயற்படும் இப்போது ஏன் அந்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இதுதொடர்பாக ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர், விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருக்கு முறைப்பாடு செய்திருக்கின்றேன் என்றார். (ம-7)

# தேர்தலை பிற்போடத் திட்டமிட்டால் பாரிய பிரச்சினை ஏற்படும்

### சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

பல்வேறு திருத்தங்களை முன்வைத்து உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் பாரிய பிரச்சினை நாட்டுக்குள் ஏற்படும்.

அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் விருப்பம் இல்லாவிட்டாலும் அதில் நாங்களும் கலந்து கொள்வோம் என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம், பாராளுமன்றம் உள்ளிட்ட 16 விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

வரவு - செலவுத் திட்ட உரையில் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்வது தொடர்பாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. என்றாலும்லாபத்தில் இயங்கிவரும் நிறுவனங்களை மறுசீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை இல்லை. பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வரும்போது அரச நிறுவனங்களை விற்பனை செய்வதில்லை எனவும் நாங்கள் விற்பனை செய்ததை மீள பெற்றுக்கொள்வதாகவே மக்களுக்கு தெரிவித்திருந்தனர். அப்படி இருக்கையில் எவ்வாறு அரச நிறுவனங்களை விற்பனை செய்ய முடியும். அதற்கு மக்கள் ஆணை இல்லை என்றார். (ம-7)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2022

"நாகரிகத்தின் வேர் காடுகள் தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது."

-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)-

# யாழ்ப்பாணம் பல்கலையில் 4 மாணவர்களுக்கு இடைக்காலத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் மாணவர்களிடையே இடம்பெற்ற கைகலப்பு தொடர்பில்நான்கு மாணவர்களுக்கு பல்கலைக்கழக செயற்பாடுகளில் பங்குபற்ற இடைக்காலத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி கிழக்கு, கலாசாலை வீதியில் கடந்த 21 ஆம் திகதி, திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவகற்கைகள் வணிக பீட சிரேஷ்ட மாணவர்களுக்கும், புதுமுக மாணவர்களுக்குமிடையில் கைகலப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சம்பவத்தின் போது சிரேஷ்ட மாணவர்களால் புதுமுக மாணவர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாக இடம்பெற்ற ஆரம்ப கட்ட விசாரணைகளில் சம்பந்தப்பட்ட மூன்று சிரேஷ்ட மாணவர்களுக்கும், ஒரு புதுமுக மாணவனுக்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில், சுதந்திரமான விசாரணை ஒன்றை முன்னெடுப்பதற்கு ஏதுவாக அடையாளம் காணப்பட்ட நான்கு மாணவர்களையும் மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பகுதிகளினுள்ளும் நுழைவதற்குத்தடை விதிக்கப்படுவதுடன், கல்வி மற்றும் பல்கலைக்கழகம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (ம-7,33)

# மரக்கடத்தல் முறியடிப்பு

(தருமபுரம்)

முல்லைதீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வாகனத்தில் கடத்தி செல்லப்பட்ட பாலை மரக்குற்றிகள் பூநகரி பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் நேற்று முன்தினம் இரவு சங்குப்பிட்டி பாலத்தடியில் கைப்பற்றப்பட்டது.

இதன்போது வாகன சாரதி தப்பியோடியதுடன் குறித்த வாகனமும் 12 பாலை மரக்குற்றிகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது. மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(4-6-316)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேலும் 10 பேர் தமிழகத்தில் தஞ்சம்

(மன்னார்)

வவுனியா மாவட்டம் கணேசபுரம் மற்றும் புவரசம் குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் உட்பட 10 பேர் மன்னாரில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு படகில் புறப்பட்டு தனுஷ் கோடி அருகே உள்ள முகுந்த ராயர் சத்திரம் பகுதியை நேற்று புதன்கிழமை காலை சென்றடைந்தனர்.

தகவலறிந்த இராமேஸ் வரம் மரைன் பொலிஸார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசா ரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் இலங் கையில் ஏற்பட்டுள்ள பொரு ளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் குழந்தை களை வைத்துக் கொண்டு இல ங்கையில் வாழ வழி இல்லா ததால் தமிழகத்திற்கு அகதி களாக வந்ததாக தெரிவித்த னர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிக ளின் விசாரணைக்கு பிறகு 10 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள் ளனர். பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து சென்ற அகதிகள் எண்ணிக்கை 208 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிட த்தக்கது. (4-6-285)



தமிழ்மொழி தினம் 2022 இற்கான தனி நடிப்புப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்ந்த செம்பியன்பற்று அ.த.க.பாடசாலையின் தரம்11 மாணவன் ஆன்சன் நேரியோ அபினாஸ் இற்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
(படம்-மகாலிங்கம்)

# செம்மணி சதுப்பு நிலங்கள் முற்றாக அழிவடையும் நிலையில்

## சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

யாழ். செம்மணி வளைவு பகுதியை சூழவுள்ள நீரேந்து பகுதிகளாக உள்ள சதுப்பு நில ங்களை கற்கள், மண் மற்றும் கட்டட இடிபாடுகள் என்பவற்றை கொட்டி அப்பகுதியை மேடா க்கும் வேலைகள் முன்னெடு க்கப்படுகிறது.

குறித்த நீரேந்து பிரதேசத் தினை மேடாக்கும் நடவடிக் கையால், அயலில் உள்ள வயல்களில் நீர் தேங்கி நிற்பத னால் வயல்கள் அழிவடையும் நிலைமை காணப்படுகிறது. ஏற்கனவே அப்பகுதிகளில் விஷமிகள் குப்பைகளையும் கழிவுகளையும் கொட்டி வருவ தனால், சதுப்பு நிலப்பகுதிகள் பாதிக்கப்பட்டு சதுப்பு நில தாவ ரங்கள் அழிவடைந்து வரும் நிலையில், தற்போது அப்பகு திகளில் கற்கள், கட்டட இடிபாடு களை கொட்டி வருவதனால் சதுப்பு நிலங்களை முற்றாக அழிக்கும் செயற்பாடு என சமூக ஆர்வலர்கள் கவலை தெரி வித்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பில் உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர்.(4-6-33)

# மன்னார் நகர சபையின் பாதீடு நிறைவேற்றம்

(மன்னார்)

மன்னார் நகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று புதன்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மன்னார் நகர சபையின் 57 ஆவது அமர்வு நேற்று நகர சபையின் தலைவர் என்.அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம் பெற்றது. இதன்போது 2023 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவு இடம்பெற்றது.இதன் போது மன் னார் நகரசபையில் 6 கட்சிகளை உள்ளடக்கிய 16 உறுப்பினர்கள் குறித்த வரவு -செலவுத் திட்டத்திற்கு ஆதரவை ஏகமனதாக முன் மொழிந்து நிறைவேற்றினர்..

தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பு,அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்,ஈழ மக்கள் ஜனநா யகக் கட்சி,ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ,ஸ்ரீல ங்கா சுதந்திர கட்சி,ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஆகிய கட்சிகளை சேர்ந்த 16 உறுப் பினர்கள் அமர்வுக்கு வருகை தந்து 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை முன் மொழிந்தனர். (4-6-285)



யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட இலங்கைக்கான பாகிஸ் தானிய உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற இராணுவ அதி காரி உமர் பாரூக் புர்கி நேற்று புதன்கிழமை முற் பகல் வடமராட்சிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.
(படம்- மகாலிங்கம்)



யாழ். இந்து மகளிர் கல்லூரியில் போதைவஸ்து பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.
(படம் - கஜிந்தன்)

# பொலிஸார் தாக்கினால் திருப்பித் தாக்குவோம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்



(முறிகண்டி)

இனிவரும் காலங்களில் பொலிஸார் தாக்கினால் திருப்பி தாக்குவோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட வலி ந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் கள் இவ்வாறு தெரிவித்துள்ள னர். இதன் போது மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவிற்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட பொழுது நாங்கள் நீதி கேட்டு அவ்விடத் தில் கூடினோம். இதன்போது பொலிஸாரும் பாதுகாப்பு தரப் பினரும் கூடி எமது போராட்ட த்தை தடுத்ததுடன் எம்மை தாக்கினர். நாம் தாக்குதலிற் குள்ளாகி இன்றும் சிகிச்சை பெற்று வருகிறோம்.

பொலிஸார் இவ்வாறு நட ந்து கொண்டமையால் எமது நீதிக்கான போராட்டம் நெருக் கடிக்குள்ளானது. நம்மை நாகரி கமற்ற வார்த்தைகளால் பேசி னர். பணத்துக்காகவும் பிரபல யத்துக்காகவும் அலைவதாக பொலிஸார் பேசினர். நாங்கள் அவை எவற்றுக்கும் அலைய வில்லை. எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கண டறியும் நீதிக்காகவே போராடுகி றோம்.

இலங்கை அரசின் மீது எம க்கு நம்பிக்கை இல்லை. சர்வ தேசம் எமக்கு நீதியை பெற்றுத் தர வேண்டும் என்றே போராடு கிறோம்.

தொடர்ச்சியாக எம்மை தாக் கும் பொலிஸாரிற்கு ஒரு விடய த்தை சொல்லி வைக்கின் றோம். நீங்கள் எம்மை தாக்கி னால் நாங்களும் திரும்ப தாக்க வேண்டிய நிலை ஏற்படும். நாங்கள் உங்கள் மீது கை வைத் தால் எம்மை கைது செய்வீர் கள் என்பதும் எமக்கு தெரியும். தொடர்ச்சியாக எம்மை தாக் குகின்றீர்கள். ஒரு கட்டத்தில் நாங்கள் பொறுமை இழந்து திரும்ப தாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்பதை அனைவரும் விளங் கிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தனர். (4-6-100)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 150 | 160 |
| தக்காளி | 350 | 300 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 250 | 180 | 160 |
| கோவா | 250 | 300 | 280 | 300 |
| கரட் | 300 | 450 | 400 | 500 |
| பூசணி | 120 | 160 | 120 | 140 |
| புடோல் | 250 | 280 | 160 | 300 |
| வாழைக்காய் | 160 | 150 | 140 | 100 |
| சின்ன வெங்காயம் | 500 | 600 | 550 | 650 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 280 | 280 |
| பாகற்காய் | 600 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 150 | 160 | 140 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 450 | 400 | 500 |
| லீக்ஸ் | 350 | 350 | 400 | 450 |
| பீற்றூட் | 280 | 300 | 280 | 400 |
| கறிமிளகாய் | 600 | 800 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 600 | 600 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | - | 350 |
| கீரை - 1 பிடி | 160 | 180 | 250 | 200 |
| தேசிக்காய் | 400 | 250 | 280 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 250 | 250 | 260 | 300 |
| வெங்காயப்பூ | 550 | - | 400 | 500 |
| முள்ளங்கி | 120 | 160 | 160 | 320 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 25 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 140 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் பெண்...

ளனர்.

பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளின் போது, 19 மற்றும் 22 வயதுடைய இரு இளைஞர்கள் 8 மற்றும் 10 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தபோது, தமக்கு, மல்லாகம் பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் போதை மாத்திரைகளை விற்பனை செய்தார் எனத் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் மல்லாகம் பகுதிக்கு விரைந்த பொலிஸார், போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 36 வயதுடைய பெண்ணொருவரை 40 போதை மாத்திரைகளுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## தவறி விழுந்த...

புத்தூர் கலைமதி கிராமத்தை சேர்ந்த பாஸ்கரன் திலக்ஸன் (வயது 19) எனும் இளைஞனே சடலமாகமீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரும் அவரது நண்பர்கள் சிலரும் இணைந்து வல்லை பாலத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வேளையில் தூண்டில் போட்டு மீன் பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன் போது இளைஞன் பாலத்தில் இருந்து நீரேரிக்குள் தவறி விழுந்துள்ள நிலையில் இளைஞரைத் தேடும் பணியில் அச்சுவேலிப் பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து ஈடுபட்டனர். இந்நிலையில் நேற்றுப் புதன்கிழமை கடற்படையினரின் சுழியோடிகளால் இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரணவிசாரணையை ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,33,60,104)

## அதிகார பரவலா...

சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்துள்ளார்

இதேவேளை அதிகாரப்பகிர்வுக்கு தமது கூட்டணி இணங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்த விடயம் சம்பந்தமாக கலந்துரையாட தயார் என எம்.ஏ. சுமந்திரனும் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தவகையில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்புகள் நிறைவடைந்த பின்னர், அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கும் அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். (ம-7)

## 4 உணவுப் பொரு...

கப்பட்டுள்ளன.

அதற்கமைய ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனியின் விலை 9 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 229 ரூபாயாகும்.

கோதுமை மாவின் விலை 14 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இதன் புதிய விலை 265 ரூபாயாகும்.

வெள்ளை பூண்டு கிலோவொன்றின் விலை 30 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 495 ரூபாயாகும்.

பெரிய வெங்காயம் கிலோவொன்றின் விலை 43 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 255 ரூபாயாகும். (ம-7)

## யாழில் மோ.சை...

யால் யாழ்ப்பாணம் நேக்கி சென்றுகொண்டிருந்த போது மாலை 5.30 மணியளவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் மாலை 6.00 மணியளவில் அனுமதிக்கப்பட்ட போதும் சிறிது நேரத்தில் உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## அதிகாரப் பகிர்வு...

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம், பாராளுமன்றம் உள்ளிட்ட 16 விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து நேற்று புதன்கிழமை இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார். ஜனாதிபதி தனது உரையில் தனக்கு முதலில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஜனாதிபதியின் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அழைப்பு தொடர்பில் அதில் காணப்பட வேண்டிய தீர்வு தொடர்பிலும் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் பதில் வழங்கினார்.

இதன்போது அவர் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவைப் பார்த்து நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப் பகிர்வு வழங்க சம்மதிப்பீர்களா என வினவினார். இதற்கு பதிலளித்த லக்ஷ்மன் கிரியெல்ல, உங்கள் பாட்டனாரும் அதிகாரப்பகிர்வை வலியுறுத்தியவர். நானும் எப்போதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துபவன். நாம் எப்போதும் அதற்குத் தடையாக இருந்ததில்லை. சில கட்சிகள் தான் அதற்குத் தடையாகச் செயற்பட்டன, தற்போதும் செயற்படுகின்றன.

இங்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இருக்கின்றார். அவர் 13 பிளஸ் தீர்வு என்றார். இந்த அதிகாரப் பகிர்வுக்கு அவர் சம்மதமா என அவரிடமே கேட்போம் எனக்கூறிவிட்டு மகிந்த ராஜபக்ஷவைப்பார்த்து "அதிகாரப் பகிர்வு வழங்க நீங்கள் சம்மதமா?" எனக்கேட்டார். இதற்கு மகிந்த ராஜபக்ஷ ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறு சிரித்துக்கொண்டு சம்மதம் என்பதற்கு அறிகுறியாக தலையை அசைத்தார். ஆனால் விதத லக்ஷ்மன் கிரியெல்ல தலையசைத்தால் மட்டும் போதாது. பாராளுமன்றத்தில் எழுந்து நின்று கூற வேண்டும் என்றார். இதனையடுத்து உடனடியாக எழுந்த மகிந்த ராஜபக்ஷ எனக்கு சம்மதம் என்றார்.

உடனடியாக பிரதமர் தினேஷ் குணவர்த்த பக்கம் தனது கவனத்தை திருப்பிய லக்ஷ்மன் கிரியெல்ல பிரதமர் இதற்கு சம்மதிக்கின்றாரா எனக் கேட்டார். ஆனால் எந்தப் பதிலும் கூறாது பிரதமர் தினேஷ் குணவர்த்தன சிரித்தவாறு அமர்ந்திருந்தார். பார்த்தீர்களா பிரதமர் எப்போதும் அதிகாரப்பகிர்வுக்கு எதிரானவர். அவர் சம்மதிக்க மாட்டார் என்றார். இதன் போது தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசனை நோக்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க "என்ன மனோ அதிகாரப்பகிர்வுக்கு நீங்கள் சம்மதமா எனக் கேட்டார். ஆம் நாம் அதனை ஏற்றுக் கொள்கின்றோம் என மனோகணேசன் பதிலளித்தார்.

அப்படியானால் சுமந்திரன் நீங்களும் சம்மதம் தானே என ஜனாதிபதி ரணில் கேட்டபோது, இது தொடர்பில் வரவு-செலவுத்திட்ட விவாதம் முடிந்த பின்னர் ஒரு திகதியை குறிப்பிட்டு கட்சித்தலைவர்களுடன் ஒரு சந்திப்பை நடத்தினால் நல்லது என சுமந்திரன் குறிப்பிட்டார்.

இதனை தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியினரைப்பார்த்து அப்படியானால் நீங்கள் சம்மதம் தானே என மீண்டும் கேட்டபோது ஒரு உறுப்பினர், அதனை தலைவர்தான் தீர்மானிக்க வேண்டும் என்கிறார். சரி அப்படியானால் இன்று இந்த விவாதம் முடிவடைவதற்குள் உங்கள் தலைவரின் முடிவை எனக்குக் கேட்டு சொல்லுங்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியபோது எழுந்து கருத்துரைத்த மனோகணேசன் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி அதிகாரப்பகிர்வுக்கு இணக்கம் என்பதனால்தான் நாம் அதில் அங்கம் வகிக்கின்றோம் எனக்கூறினார்.

நல்லது அப்படியானால் வரவு செலவுத்திட்ட விவாதம் டிசம்பர் 8 ஆம் திகதி, முடிவடைந்த பின்னர் 12 ஆம் திகதிக்குள் ஒரு சந்திப்பை நடத்துவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/11/23
சீட்டிழுப்பு இலக்கம் 4948
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Y 3 6 3 2 3 0
தேசிய லொத்தர் சபை

HANDARANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.23
சீட்டிழுப்பு இலக்கம் 257
வெற்றி இலக்கங்கள்
கடகம் 27 42 47 48 கடகம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 23/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1296
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
X 23 42 50 60 77

கொவிசெத
திகதி 2022.11.23
சீட்டிழுப்பு இலக்கம் 3190
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
E 23 49 56 80
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.11.23
சீட்டிழுப்பு இலக்கம் - 978
M 09 11 41 63
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி: 011 460 7000 / 011 232 4334

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1403
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 4 4 9 2 6 7
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1749
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.11.23
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,083,900/-
வெற்றி இலக்கங்கள்
02 16 32 51
ஆங்கில எழுத்து P

சனிதா Shanida
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.23
சீட்டிழுப்பு இல : 4084
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,692,920/-
வெற்றி இலக்கங்கள்
10 22 64 65
ஆங்கில எழுத்து B
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,218,578.20
திகதி 2022-11-23
வெற்றி வாரம் 3635
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 04 10 28 46
சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,304,780/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
27
V 25 23 25 37 74
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1099
வர்ணம் பச்சை
திகதி 2022.11.23 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 279,788,849.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1873
சீட்டிழுப்பு திகதி 2022-11-23
வெற்றி இலக்கங்கள்
07 29 53 69
ஆங்கில எழுத்து N
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. -37,354,828/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1923
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.23
தினம் புதன்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,221,780/-
I 01 31 59 67
ரூ.500/- பரிசுக்குரிய 5823
ரூ.100/- பரிசுக்குரிய 637


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தலைவர்..

குறித்த கலந்துரையாடலில் தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றுகூடி ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பிலும், தற்போதைய நாட்டின் சூழ்நிலை தொடர்பிலும் கலந்துரையாடினர்.

# போராட்டத்தை அடக்குவது வருத்தமளிக்கிறது - விஜித ஹேரத்

(கொழும்பு)

போராட்டத்தினாலேயே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்க முடிந்ததனால் அதனை அடக்க முயல்வதைவிட போராட்டத்திற்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின்போது உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், ஜனாதிபதியின் இந்த கருத்து வருத்தமளிப்பதாக தெரிவித்தார்.(ம-7)

மேலும் தமிழ் பேசும் மக்களின் நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு காணும் அடிப்படையில் தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு ஒன்றுகூடி முக்கிய தீர்மானமொன்றினை எடுக்கும் முயற்சியாக இந்தக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. (ம-7)

## இனப்...

தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான பேச்சுக்களை நடத்தவருமாறு தமிழ் கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அழைப்பு விடுத்துள்ள நிலையில், பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். (ம-7)


## வான் விற்பனைக்கு

Toyota Noah
வான் விற்பனைக்கு
(1999 ஆண்டு
automatic aircondition
புதிய டயர்கள், புதிய பற்றறி,
reverse camera)

தொடர்பு (13550)
**077 699 4083**

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள
Village Hotel and Indian Restaurantக்கு
House Keeper, Waiter தேவை.

தொடர்பு (13548)
**076 830 3931**

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

- TVS Scooty Pop+ (BBG)
- Honda LACAS - 250 (BAQ)
- Honda MD - 90 (unregistered)

(13546)
**T.P - 077 887 5037**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

(13555)
தொடர்புகளுக்கு - ஜெயம்
**077 814 7389, 077 986 5457**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13551)
**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவிலையும் பிரதேச சபையையும் அண்மித்த பகுதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. (பிரித்தும் வழங்கப்படும்) பிரதான வீதியில் இருந்து 50 m தூரம்

விலை:- 1 பரப்பு 55 லட்சம் (13547)
**077 538 4132, 070 617 2892**


## மரண அறிவித்தல்

### கந்தையா கணேசதாஸ் (ராசர்)

**(ஓய்வுபெற்ற கிராம சேவகர், அகில இலங்கை சமாதான நீதவான்)**



தம்மளை அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணேசதாஸ் அவர்கள் நேற்று (23.11.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சர்வேஸ்வரியின் (வலி.வடக்கு விவாகப் பதிவாளர்) அன்புக் கணவரும் அனோஜன் (தொழிலதிபர்), மனோஜன் (மென்பொருள் பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிருந்தா (மென்பொருள் பொறியியலாளர்), தர்சிகா (மென்பொருள் பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் ஜெகதீஸ்வரி, ஜெகசோதி (லண்டன்), சிறீதரன் (கனடா), ஜெயரூபி (சமுர்த்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனேஸ்வரி, விமலரட்ணம், பாலகுமார் (லண்டன்), மனோரஞ்சன், காலஞ்சென்றவர்களான நடேசலிங்கம், சுந்தர்ராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2022) வியாழக்கிழமை பிற்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் (மல்லாகம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-5322)

## மரண அறிவித்தல்

மண்ணில் 02 – 12 – 1935



விண்ணில் 21 – 11 – 2022

### கந்தையா சிவராசா

**(ஓய்வுபெற்ற உப அதிபர், அரியாலை, ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, இணைச் செயலாளர், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசஇராஜேஸ்வரி பேச்சி அம்மன் ஆலயம்)**

நாயன்மார்கட்டு அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா அவர்கள் கடந்த (21.11.2022) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் செல்லத்தம்பி - அம்மாக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகுமார்(லண்டன்), சுகுமார்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சினி, கோஷல்யா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், இரகுபதி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பத்மராணி காலஞ்சென்றவர்களான துரைராசா, திலகரத்தினம், இராஜேஸ்வரி மற்றும் ரேவதி(குட்டி அம்மா), முருகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் பைரவி, நர்த்தனன், ஜெனதன், அபிநயா, நிதிலா, விஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ராஜ்குமார், ரஜனி, ரஜனிகாந், ராஜேந்திரகுமார், ஜெயக்குமார், தர்சினி, ஜீவகுமார், நந்தகுமார், சுபாசினி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.11.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல.29, வைரவர் கோவில் வீதி,
நாயன்மார்கட்டு, அரியாலை. (13543) 021 221 1140

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.